பக்கங்கள்: பதினாறு

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 15 செவ்வாய்க்கிழமை (30.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:034

# கிளிநொச்சியைக் கைப்பற்றி பிரபாவை பிடித்து விடுவோம்

## பெப். 7க்கு முன்னர் நாள் குறிக்கிறார் ரம்புக்வெல

கொழும்பு, டிசெம்பர் 30

அடுத்த் நாற்பது நாள்களுக்குள் அரச படைகள் கிளிநொச்சியைக் கைப்பற்றி, புலிகளின் தலைவர் வே.பிரபாகரனையும் பிடித்து வந்து சட்டத்தின் முன் நிறுத்தி விடுவர் என நாள் குறித்து அறிவித்திருக்கிறார் அரசின் பாதுகாப்புத் துறைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதி மத்திய மற்றும் வடமேல் மாகாணத் தேர்தல் வாக்களிப்பு இடம்பெறுகின்றது. அதற்கு முன்னரே இந்தக் காரியங்களை அரசுப் படைகள் ஒப்பேற்றிவிடும் என்று அவர் சூளுரைத்திருக்கின்றார்.

மத்திய மாகாண சபைத் தேர்தலையொட்டி ஐ.ம.சு.முன்னணியின் வேட்பாளராக போட்டியிட இருக்கும் டாக்டர் எ.எல்.எம். உவைஸின் என்பவரின் பிரசாரப் பணிகளுக்காக கண்டி கந்தே வீதியில் புதிய அலுவலகம் ஒன்றை நேற்று திறந்து வைத்துப் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

எமது நாட்டில் பல்லின மக்கள் வாழ்ந்து வரும் இவ்வேளையில் சிங்களவராக மாத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பால் மா வகைகள், எரிவாயுவின் விலைகள் இன்னும் குறையுமாம்

கொழும்பு, டிசெ.30

அடுத்துவரும் சில தினங்களில் பால்மா வகைகள் மற்றும் சமையல் எரிவாயுவின் விலைகள் மேலும் குறைக்கப்படவுள்ளன என்று வர்த்தக, சந்தை அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் உள்ள தங்கெதர பிரதேசத்தில் லக் சதொசவின் 98 ஆவது கிளையை அண்மையில் திறந்துவைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனை அறிவித்துள்ளார்.

இதேவேளை, அரசினால் அறிவிக்கப்பட்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் நிலையை நேரில் அறிய இன்று அங்கு விஜயம் செய்கிறார் ஜயலத்



கொழும்பு, டிசெ.30

வன்னியில் அவலப்படும் மக்களின் நிலைமையை நேரில் அறிய அங்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா தெரி வித்தார்.

அங்கு அல்லற்படும் மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்காக இன்று அங்கு செல்வதாக அவர் நேற்றிரவு உதயனுக்கு தெரிவித்தார்.

தமது விஜயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(15 பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் அகோர விமானத் தாக்குதல்கள்

கிளிநொச்சி, டிசெ. 30

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி பிரதேசம் மீது நேற்று 12 மணி நேரத்தினுள் ஐந்து தடவைகள் விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

கிளிநொச்சிக்கு மேற்கே உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை இலக்கு வைத்து நேற்றுக் காலை 9.30 மணிக்கும் முற்பகல் 10.30 மணிக்கும் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்திய பின்னர் அதே பகுதி மீது பிற்பகல் 2.35 மணியளவிலும் தாக்குதலைத் தொடுத்தன.

அதேசமயம், கிளிநொச்சி நகர் மீது நேற்று பிற்பகல் 2.45 மணியளவிலும் பரந்தனுக்கு மேற்கே பிற்பகல் 4.15 மணியளவில் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்று விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக்க நாணயக்கார தெரிவித்தார்.

இத்தாக்குதல்கள் கிளிநொச்சி நகரை நோக்கி முன்னேறிச் செல்லும் 57 ஆவது படைப்பிரிவுக்கு உதவியாகவே நடத்தப்பட்டனஎன்றும்அவர்மேலும்தெரிவித்தார். (அ-சி)

## வத்தளை தற்கொலைத் தாக்குதல்: எண்பது பேர் சந்தேகத்தில் கைது

கொழும்பு, டிசெ. 30

கொழும்பின் புறநகர்ப் பகுதியான வத்தளை ஹேக்கித்த வீதியில் பள்ளியாவத்தை புனித அன்னம்மாள் தேவாலயத்திற்கு அருகில் அமைந்திருந்த ஊர்காவற் படையினரின் அலுவலம் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## செலான்வங்கியின் நிர்வாகத்தை பொறுப்பேற்றது இலங்கை வங்கி

### மத்திய வங்கியின் விசேட பணிப்பின் பேரில்

கொழும்பு, டிசெ.30

மத்திய வங்கியின் உத்தரவின் பேரில் செலான் வங்கியின்நிர்வாகத்தைஇலங்கை வங்கி பொறுப்பேற்றுள்ளது.

கோல்டன் கீ கிரெடிற் காட் நிறுவனத் தில் ஏற்பட்ட நெருக்கடிகளை தொடர்ந்து அந்த நிறுவனம் தொடர்ந்து செயற்படுமா - என்ற அச்சம் பணத்தை வைப்பிலிட்டவர்கள் மத்தியில் தோன்றிய நிலையிலேயே மத்திய வங்கி இந்த முடிவை எடுத்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் மீது துப்பாக்கிச் சூடு! மூன்று பொதுமக்கள் படுகாயம்!!

### ஓமந்தைச் சோதனை நிலையத்துக்கு அருகே சம்பவம்

கொழும்பு, டிசெ. 30

வன்னியிலிருந்து ஓமந்தைக்கு நேற்றுமுன்தினம் இடம்பெயர்ந்து சென்ற அகதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் காயமடைந்துள்ளனர்.

வன்னியில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் தொடர்ச்சியாக மோதல் இடம்பெற்றுவருகின்றது. இந்நிலையில் அங்குள்ள அப்பாவிப் பொதுமக்கள் தமது பாதுகாப்பைத் தேடி தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து ஓமந்தைச் சோதனை நிலையத்துக்குச் சமீபமாக மக்கள்சென்று கொண்டிருந்த போது காட்டுப்பகுதியில் மறைந்திருந்தவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்திலேயே இந்த அகதிகள் மூவரும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், மருமகள் ஆகியோரே காயமடைந்தனர் எனவும் கூறப்பட்டது.

காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவக்கட்டுப்பாடற்றபகுதியிலிருந்து 659 பொதுமக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்திருக்கின்றனர் எனவும், இவர்கள் அனைவரும் வவுனியா, நெளுக்குளம் இடைத்தங்கல் முகாம், செட்டிகுளம் பொதுநோக்கு மண்டபம் மற்றும் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் வவுனியா அரச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

## வடக்கும் தெற்கும் ஒரு போதும் பிரிந்திருக்க முடியாது; இரு பிரதேச மக்களினதும் புரிந்துணர்வு தொடர வேண்டும்

### யாழ். கண்காட்சியில் கூடிய மக்களுக்கு ஜனாதிபதி உரை

யாழ்ப்பாணம், டிசெ. 30

வடக்கும், தெற்கும் ஒரு போதும் பிரிந்திருக்க முடியாது. இரு பிரதேச மக்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு எப்போதும் தொடர வேண்டும். அதனை எக்காரணம் கொண்டும் உடைக்க அனுமதிக்க முடியாது.

இவ்வாறு தெரிவிக்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுக் கூடியிருந்த மக்களுக்குகொழும்பில் இருந்து செய்மதி மூலம் உரையாற்றுகையில் ஜனாதிப்தி இதனைக் குறிப்பிட்டார்.

செய்மதி மூலம் மாலை 6.30 மணி முதல் 6.45 மணி வரை உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

வடக்கு - தெற்கு மக்களுக்கு இடையில் அன்று முதல் தொடரும் உறவு மேலும் தொடரவேண்டும் என்பதே எமது அரசின் அவாவாகும்.

சட்டக்கல்லூரியில் கல்வி பயிலும் போது யாழ்தேவி ரயிலில் யாழ்ப்பாணம் வந்து திரும்பியுள்ளேன். அந் நிலை மீண்டும் வரவேண்டும்என்பதே சகலரும் விருப்பமுமாகும். (16 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு உறுப்பினர் காரைதீவில் சுட்டுக்கொலை

அம்பாறை, டிசெ. 30

அம்பாறை, காரைதீவுப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் வைத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர் கல்முனைக்குடி வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்டார்.

விதுலன்தர்மன்என்பவரே [illegible] கொல்லப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
83, Palaly Road, Kantharmadam, Jaffna.
Phone: 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com

**LEARN FRENCH THE FRENCH WAY**

**French Classes**

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் மூலமும் Alliance Francaise de Paris இன் மூலமும் மேற்கொள்ளப்படும். பிரெஞ்சு மொழி வகுப்புகளுக்கு ஆர்வமுள்ள அனைவரும் கற்கலாம்.
மேலும் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் கற்கலாம்
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில்.
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் ஏனைய விபரங்களை நேரில்/தொலைபேசியின் ஊடாக பெறலாம்.


## உங்களுக்கு சமாதானம்

**50 ஆவது நிகழ்ச்சி**

பாவப்பயமா? விடுதலை இல்லையா?
கவலை? எதிர்காலத்தைக்குறித்த பயமா?
தீராத வியாதியா?
வாருங்கள்! விடுதலை பெறுங்கள்
இயேசு விடுவிக்கிறார்.

இடம்: கொக்குவில் கல்வாரி தேவாலயத்தின் முன்னால்
காலம்: இன்று (30.12.2008)
நேரம்: மாலை 4.30
விஷேச பேச்சாளர்: சகோதரன் துரைராஜா (மனதுருக்கும்)
போதகர்: வெஸ்லிமத்தியூஸ்
விஷேச பாடல்கள், நாடகங்கள், சிறார்களின் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயம்,
89 பிறவுண் றோட்,
கொக்குவில்.

## பாக்கிய தீபம் அணைந்ததே ஓராண்டு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 02 | | 10 |
| ★ | | ★ |
| 08 |  | 01 |
| ★ | | ★ |
| 1939 | | 2008 |

**திருமதி இராஜதுரை சிவபாக்கியம் (இராசு)**
**திதி: திருதியை (30.12.2008)**

அன்பு வதனமே பாசத்தின் குல விளக்கே
மங்காத அன்புரையே மகிழ்ந்திட்ட மாமுகிலே
அணைந்து ஆருயிர் ஓராண்டு ஆனதோ
இல்லமது வளம் பெறவே வழி சமைத்த தெய்வமே
இரக்கமற்ற கொடுநோய் உன்உடலில் வந்ததேனோ
பேரருடன் ஆசை கொண்டு கட்டி அணைத்த தெய்வமே
பாசமழை இன்று பாழாய்ப் போனதோ
நீங்காத நினைவிலே நெஞ்சச் சுமையுடனே
கற்பூரமாகி ஓராண்டு சுழன்றாலும்
பாவியெம் உள்ளத்தைவிட்டு என்றென்றும் ஆறாது
நம் ஜீவன் உள்ளவரை துதிப்போம்! போற்றுவோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஜெய உதயம்",
அம்மன் றோட்,
திருநெல்வேலி கிழக்கு.

இங்ஙனம்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### நடராசா சின்னம்மா

புத்துரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா சின்னம்மா நேற்று (29.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் நாதன் (ஜேர்மன்), கெந்தீஸ்வரன் ஆகியோரின் தாயாரும் கீதாஞ்சலி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற கனகரத்தினம், கனகசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கீர்த்தனா, நிர்மிதா, மோனிசா, சிவகஜன், சிவராகவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் மேற்கு கிந்து சிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகசிங்கம் (சகோதரன்)
அம்பாள் புடைவை அகம், புத்தூர்.
புத்தூர் மேற்கு.

**திருவாசக முற்றோதல்**

உடுவில் கிழக்கில் கடவுள் சந்நிதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் திருவாச முற்றோதல் இடம்பெறவுள்ளது.

அத்துடன் ஸ்ரீரமண மகரிஷியின் 130 ஆவது ஜயந்தி தினத்தை ஒட்டி பூஜைகள், ஆராதனைகள், சொற்பொழிவு ஆகியனவும் இடம்பெறும்.

(1)

## பன்றித்தலைச்சியில் பெருந்திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.30

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(1-207)

## கூட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.30

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இன்று நடைபெறவிருந்த குழுக் கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளன.

பிரதேச ஒழுங்கிணைப்புக் குழு, பிரதேச விவசாயக்குழு, பிரதேச சிறுவர் பாதுகாப்பு குழு ஆகியவற்றுக்கு நடைபெறவிருந்த கூட்டங்களே பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(1-207)

## பருத்தித்துறையில் நள்ளிரவு ஆராதனை

வடமராட்சி, டிசெ.30

பருத்தித்துறை பங்கில் நாளை புதன்கிழமை நள்ளிரவு புதுவருட ஆராதனை பருத்தித்துறை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆராதனை, வழிபாடுகளை பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. றொக்னோ அடிகளார் நடத்தி வைப்பார்.

(1-236)

### தவறிவிட்டது

தியாகராஜா கேதீஸ்வரன் என்பவரது இராணுவ அ.அ.இல. 0901029659 அல்லைப்பிட்டிக்கும் மண்டைதீவுச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு: இல.210/6, காரைநகர் வீதி, கொட்டடி.

### தேவை Pizza makers

(முழுநேரம்/பகுதிநேரம்)

பீஸ்ஸா தயாரிப்பதில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை. 0776622247 எனும் தொலைபேசியில் பகலில் தொடர்பு கொள்ளவும்.

### தவறிவிட்டது

733123451V எனும் இலக்கமுடைய தென்மூலை, அச்சுவேலியைச் சேர்ந்த யோசெப் இம்மனுவேல் பிறின்ஸ் ஆகிய எனது அடையாள அட்டை கொலிக்கொறொஸ் இற்கும் கோவில் வீதிக்கும் இடையில் 29.12.2008 தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

முகவரி: தாசன் பாம்,
154/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 6367924, 021 222 5726

### திருத்தி வாசிக்கவும்

நேற்றைய (29.12.2008) உதயனின் 12ஆம் பக்கத்தில் வெளியான அமரர் சின்னட்டிப்பிள்ளை திரவியம் என்பவரின் மரண அறிவித்தலில் -

தகவல்: குடும்பத்தினர், தொ.பே. இல. 0771510556 என்பது தொழில் நுட்பக் கோளாறால் பிழையாகப் பிரசுரமாகி இருந்தது. திருத்தி வாசிக்கவும்.

### தவறிவிட்டது

மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி என்னும் முகவரியுடைய தே.அ.அட்டை (613334130 V), ஆமி அ.அட்டை, தொழில் தருநர் அட்டை என்பன அடங்கிய பச்சைநிற பேர்ஸ் இருபாலைக்கும், முத்திரைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை காரியாலயம், [illegible] என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது அனுப்பியோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.





அனைத்து DTH சேவைகளுக்கான கட்டணங்கள் செலுத்திக் கொள்ளலாம்

**SATS-TECH ENGINEERS**
Dealers for Satellite Receiving Equipments and Cable Tv Accessories

No: 218 A/2, Wolfendhal Street, Colombo-13. Phone:- +94 11 4562929
NO: 182, K.K.S.Road, Kokuvil-Jaffna. Phone:- 021 2225908
No: 11/10B, Stanly Road, Jaffna. Phone:- 021 2228812


## மரண அறிவித்தல்கள்

### சொக்கலிங்கம் முத்துக்குமாரு

ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய சொக்கலிங்கம் முத்துக்குமாரு நேற்று (29.12.2008) திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தி (இந்தியா), கமலநாதன் (இந்தியா), சந்திரன் (பிரான்ஸ்), இந்திரன் (லண்டன்), பிரபு (பிரான்ஸ்), புஸ்பா (இந்தியா), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் புவனேஸ்வரன் (கொழும்பு), பவானி (லண்டன்), மதி (பிரான்ஸ்), குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் இந்தியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னத்துரை குடும்பம், தளையசிங்கம் குடும்பம், பரமதேவன் குடும்பம்.
இல.47, சபாபதி லேன்,
கொக்குவில்.

### வேலாயுதபிள்ளை உருத்திரலிங்கம்



இருபாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை உருத்திரலிங்கம் (சின்னச்செல்வம்) நேற்று (29.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - குருவம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரான்சில் வசிப்பவரான கோமதி (முன்னாள் ஊழியர், கோண்டாவில் மத்திய மருந்தகம், பற்சிகிச்சைப் பிரிவு) அன்புத் தகப்பனும் காண்டீபனின் (பிரான்ஸ்) மாமனாரும் தேயோபிரதிப்பின் (பிரான்ஸ்) அன்புப் பேரனும் சண்முகராசா (காட்டர் - தொண்டைமானாறு) காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சிவகுருநாதன், ஆனந்தஈஸ்வரி, பேரின்பவம், யோகேஸ்வரி, தர்மலிங்கம் (பிரான்ஸ்), பஞ்சரட்ணம் (ரத்தினம் - பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உ.கமலேஸ்வரி (மனைவி).
அம்மன் கோவிலடி,
கோண்டாவில்.

### திருமதி திலகவதி கனகநாயகம் (கந்தரோடை)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தை தற்போதைய முக்வரியாகவும் கொண்ட திருமதி திலகவதி கனகநாயகம் (29.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பச்சி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அமரர் சங்கரப்பிள்ளை கனகநாயகம் (ஓய்வுபெற்ற அரச லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் வேல்தஞ்சன் (முகாமைத்துவ உதவியாளர், உடுவில் கல்விக் கோட்டம்), சிவன்சேய் (ஆசிரியர், யா/ வட்டு மத்திய கல்லூரி), ஹரிஹரசக்தி (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் அம்பிகாதேவியின் சிறிய தாயும் றஜனி, பாரதி (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), சுபிதா (ஆசிரியை, யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் பொன்மகள், கிஷோக்குமார், வேணுசாயினி, வித்தகன், கிருசிகன், பார்கவி, நீதிகா, இனிந்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கதிரமலை, தெய்வானைப்பிள்ளை, வன்னியசிங்கம் மற்றும் முருகையா (கனடா), வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (தொல்புரம் மேற்கு) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஹரிகரசக்தி (மகன்).
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

(81289)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தாக்குதல்களுக்கு இலக்காகும் காஸாவும் கிளிநொச்சியும்

பாலஸ்தீன தேசம் மீது மிகக் குரூரமான தாக்குதல்களை கொடூரமாக ஆரம்பித்திருக்கின்றது இஸ்ரேல்.

மத்திய கிழக்கில், பாலஸ்தீன மக்களைத் துரத்தியடித்து, ஆக்கிரமித்த பிரதேசத்திலே இஸ்ரேல் தேசம் உருவாகிய பின்னர் - இந்த அறுபது ஆண்டு காலத்திலே - மிக மோசமான இரத்தக் காட்டாறு ஓடிய நாள்களாக கடந்த ஓரிரு தினங்கள் அமைந்திருக்கின்றன. நேற்று முன்தினம் மாத்திரம் நூற்றுக்கு மேற்பட்ட பறப்புகளை மேற்கொண்டு, காஸா முனை மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டு மாரி பொழிந்ததில் குறைந்தபட்சம் முந்நூறு பேர் வரை படுகொலை செய்யப்பட்டிருக்கின் றனர். மேலும் பலர் அங்கங்கள், அவயவங்களை இழந்து படுகாயமடைந்திருக்கின்றனர்.

இஸ்லாமிய ஹமாஸ் இயக்கப் போராளிகள் நடத்திய றொக்கட் தாக்குதல்களுக்குப் பதிலடி என்ற பெயரில் ஸியோனிய வாதிகளின் பயங்கரவாதம் மூர்க்கமாகக் கட்டவிழ்கிறது. அதைப் பார்த்து வாளாவிருக்கின்றது சர்வதேச சமூகம்.

விடுதலை தேடும் நீதி,நியாயத்தோடு, தேசியங்கள் நடத்தும் போராட்டங்களைப் 'பயங்கரவாதம்' என்று முத்திரை குத்தி ஒதுக்கும் சர்வதேசம், யுத்தம் என்ற பெயரில் இஸ்ரேல் புரியும் எல்லை கடந்த பயங்கரவாதத்தைக் கண்டிக்கவோ, தடுக்கவோ செய்யாமல் பார்த்திருப்பது வேதனைக்குரியது; கண்டனத்துக்குரியது.

தன்னுடைய தேசத்தில் இனவாதம், மதவாதம் பேசி அதன் மூலம் செல்வாக்கையும் வாக்குப் பலத்தையும் தக்கவைத்துப் பெருக்கிக் கொள்ள முயலும் அரசியல் தலைமைகள், தமது நாட்டின் பெரும்பான்மைத் தேசியத்திடம் சிக்கி அல்லலுறும் சிறுபான்மைத் தேசியங்களை மேலும் மேலும் வருத்தி, நலிவுறச் செய்து, மண்டியிட வைப்பதன் மூலம் தம்முடைய நிலையை ஸ்திரப் படுத்திக் கொள்ள முயல்கின்றன.

இலங்கையில் ஈழத் தமிழரையும், தமிழ்த் தேசியத்தை நிலை நிறுத்தும் அவர்களது மன அவாவையும் கருவோடு நசுக்குவதன் மூலம் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளிடம் 'நல்ல பிள்ளை' பட்டம் வாங்கி, அதன் மூலம் தமது அரசியல் செல்வாக்கைத் தக்கவைத்துக்கொள்ள முயலும் அரசியல் தலைமைகள், இங்கு அதற்காகப் பேரினவாதத்தை அரவணைத்து நிற்கின்றன. அதன் விளைவாகத் தமிழர் தேசம் மீது கொடூர யுத்தம் ஒன்று இங்கு கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

பாலஸ்தீனத்தின் காஸா நிலப்பரப்பு மீது இஸ்ரேல் இன்று தொடுத்திருக்கும் கொடூர யுத்தமும் கூட இத்தகைய பின்னணியைக் கொண்டதுதான்.

இஸ்ரேலில் அடுத்த பொதுத்தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. அதற்கு இன்னும் ஆறு வாரங்கள் கூட இல்லை.

இடதுசாரிப் போக்குடைய எதிர்க்கட்சியான லிக்யூட் கட்சி இத் தேர்தலில் வெற்றிபெறும் எனத் தற்போதைய கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. அது, ஆளும் தரப்பின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றது.

எப்படியும் இஸ்ரேலிய மக்களைத் தம்பக்கம் திருப்பிவிட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் ஆளும் தரப்பு அதற்கான கடைசி எத்தனமாக பாலஸ்தீனம் மீதான கொடூரத் தாக்குதல் என்ற காய் நகர்த்தலை முன்னெடுக்கின்றது.

இஸ்ரேலைக் காப்பதற்காக, இஸ்லாமியர்களுக்கு எதிராக வெகுண்டு எழும் தலைமை என்று தன்னைக் காட்டுவதன் மூலம் ஆட்சியை அடுத்த தடவைக்கும் தக்கவைக்க முடியாதா என்ற நப்பாசை இஸ்ரேலின் பிரதமர் எகுட் ஒல்மேர்ட் தலைமையிலான அரசுக்கு. அதன் விளைவே இவ்வாறு பல நூறு பேர்களைத் தினசரி கொன்றொழிக்கும் கொடூர வான் வழித்தாக்குதல்களாக வடிவமெடுத்திருக்கின்றன.

இங்கும் இதேபோன்று தமிழர் தாயகத்தின் மீது - குறிப்பாக கிளிநொச்சி உட்பட்ட வன்னி மண் மீது - கொழும்பு தொடுத்திருக்கும் கோரத் தாக்குதல்களை சர்வதேச சமூகம் கண்டும் காணாமலும் இருப்பது போல-

அங்கும், காஸா மீது இஸ்ரேல் தொடுத்திருக்கும் வன்முறைப் புயலின் பேரழிவு விளைவுகளை சர்வதேசம் கண்டும் வாளாவிருக்கின்றது.

காஸா நெடுந்துண்டப் பிரதேசம் மீது இஸ்ரேலிய விமானங்கள் நடத்தும் குண்டு மழைக்குப் பயந்து, உயிரைக் காப்பாற்றித் தப்புவதற்காக எகிப்து எல்லையை நோக்கி ஓடும் பாலஸ்தீன மக்களை எகிப்துப் படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலைக்கின்றன.

ஈழத் தமிழ் மக்கள் பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பால் அல்லலுறுகின்றனர் என்றால், பாலஸ்தீன மக்கள் ஸியோனியவாதிகளின் ஆக்கிரமிப்பினால் அவலப்படுகின்றனர்.

தேசக் கட்டுமானங்கள் என்ற முகமூடித்திரைக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் அரச பயங்கரவாதங்களை அடையாளம் கண்டு, அடக்கி ஒடுக்கும் முயற்சியில் சர்வதேசம் முழு மூச்சுடன் இறங்கினாலன்றி இத்தகைய பிரச்சினைகளுக்கு நியாயத்தீர்வு கிட்டுவது அபூர்வமாகும்.

# மின்மானிகளில் மோசடி செய்து வந்த 450 பேர் இவ்வாண்டு பிடிபட்டனர்

## சட்டவிரோத இணைப்புக்களால் உயிரிழப்புகள் அதிகரிப்பு

வலி.வடக்கு, டிசெ.30

இவ்வாண்டு மின்மானிகளில் மோசடி செய்து மின்சாரம் பெற்று வந்த 450 இற்கும் மேற்பட்ட மின்பாவனையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒருபுறம் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் அதேவேளை மறு புறத்தில் சட்டப் பிரகாரம் மின்சாரத்தைப் பெற்றுப் பின்னர் மின்மானிகளில் மோசடி செய்பவர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களினால் மின்சாரசபைக்கு நட்டம் ஏற்படுவதுடன் மின்பாவனையாளர்களுக்கு மின் விநியோகத்தைச் சீராக வழங்க முடியாத நிலைமையும் ஏற்படுவதாக மின்சாரசபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சட்டவிரோத மின்சாரம் பெறும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் பொதுமக்கள் தம்மால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டும் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதன் விளைவாக இந்த ஆண்டில் சிறுவர்கள் உட்பட பலரின் உயிர்கள் அநியாயமாக இழக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (50-86)

# வன்னியிலிருந்து யாழ்.வந்துள்ள அகதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

## அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

வன்னியிலிருந்து குடாக்கடல் ஊடாக யாழ்ப்பாணம் வந்துள்ள அகதிகள் போதிய வசதிகள் இன்றி உள்ளனர். எனவே, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மேற்கொள்ளும்.

இவ்வாறு தெரிவித்தார் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் யாழ். அலுவலகத் தலைவி செல்வி ஐற்ரா சுவற்றி.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு அகதிகள் வருகின்றனர். அவர்கள் இங்கு நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுவருகின்ற போதிலும் அவை போதுமானவையாக இல்லை. எனவே, அவர்களின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்துவதற்கான வசதிகளை சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்ளவுள்ளன. இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்து செயலாற்றி வருகின்றது. இணையத்தில் அங்கம் வகிக்கும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களும் தமது திட்டங்களைத் திறமையாக முன்னெடுத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வருகின்றன. இந்நிலையில் 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததைப்போன்று சர்வதேச தொண்டு நிறுவனங்களையும் இணையத்தில் அங்கத்துவம் வகிக்குமாறு அவர்கள் எம்மிடம் கோரியுள்ளனர். அந்தக் கோரிக்கை அடுத்த ஆண்டில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும். அனைவரும் இணைந்து செயலாற்றுவதன் மூலம் மக்களின் தேவைகள் சரியாக இனங்காணப்படுவதுடன் அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளமுடியும் என்றார்.

இணையத்தின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இணையத்தில் அங்கம் வகிக்கும் 20 உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் 2009 ஆம் ஆண்டுக்கான நிறைவேற்றுக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

அதன் தலைவராக சி.வி.கே.சிவஞானம் இரண்டாவது தடவையாகவும் தெரிவானார். செயலாளராக என். சுகிர்தராஜூம் பொருளாளராக திருமதி ஜெபமணி ஜோசப்பும் உபதலைவராக டாக்டர் வை.தியாகராஜாவும் உப செயலாளராக வி.ஸ்ரீசக்திவேலும் தெரிவானார்கள். (50)

# வடமராட்சி வலயத்தில் ஆழிப்பேரலையால் சேதமான 2 பாடசாலைகள் மட்டுமே புனரமைப்பு

வடமராட்சி, டிசெ.30

வடமராட்சி கல்வி வலயப் பிரதேசத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சேதமடைந்த பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகள் மட்டுமே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வலயத்திலுள்ள மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் 9 பாடசாலைகளும் பருத்தித்துறைக் கல்விக்கோட்டத்தில் 2 பாடசாலைகளும் ஆழிப்பேரலை அனர்த்ததில் சிக்குண்டு பெரிதும் சேதமடைந்திருந்தன.

இவற்றில் மருதங்கேணி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் 7 பாடசாலைகள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் அமைந்துள்ளன. ஏனைய இரு பாடசாலைகளான மணல்காடு, றோமன் கத்தோலிக்க பாடசாலை குடத்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகியன பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ளன. இவ்வருட பாடசாலைகளும் தற்காலிக கொட்டகைகளில் தற்போது இயங்கி வருகின்றன.

பருத்தித்துறை கல்விக்கோட்டப் பாடசாலைகளில் பெரும் சேதத்துக்குள்ளான வல்வெட்டித்துறை, றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம் ஆகிய இருபாடசாலைகளிலும் யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுன் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இயங்குகின்றன.

இதேவேளை பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கான தளபாடங்கள் உள்ளிட்ட பௌதீக வளங்களை வடமராட்சி கல்விவலயம் கல்வித்திணைக்களத்தின் உதவியுடன் ஏற்படுத்தி வருகின்றது. (50-236)

# சேவை நலன் பாராட்டு வைபவம்

வடமராட்சி, டிசெ.30

கடந்த 6 வருடங்களாக பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தின் முதன்மைக் குருவாகப் பணியாற்றி கல்முனைக்கு இடமாற்றலாகிச் செல்லும் அருட்திரு டேவிட் அழகராசாவுக்கு சேவை நலன் பாராட்டு வைபவம் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தில் புதிய முகாமைக்குரு அருட் திரு என்.அருள்நாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நன்றி செலுத்தும் வழிபாடும் நடைபெறும். (50-236)

# மாவட்ட மட்ட குழுநிலை போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்.மாவட்ட வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கூடைப்பந்தாட்டம் (ஆண்/பெண்) மேசைப்பந்தாட்டம் (ஆண்/பெண்), பூப்பந்தாட்டம் (ஆண்/பெண்), ஹொக்கி (ஆண்) ஆகிய குழுநிலைப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள விளையாட்டுக் கழகங்கள் மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவுடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்குமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை தத்தமது பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

# சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.30

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவர்களுக்கான சீருடை விநியோகம் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (202)

# விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் 2007/2008 கல்வியாண்டின் கல்வியியல் முதுமாணி மற்றும் முதுகலைமாணிக் கற்கைநெறி விரிவுரைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

அபிவிருத்திக் கற்கை நெறி குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி பிரதேச திட்டமிடல் கற்கைநெறி ஆகியவற்றுக்கான பருவ விரிவுரைகளே ஆரம்பமாகவுள்ளன. (202)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 16 | 31.12.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.இ. 12.56வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | பி. இ. 05.17 வரை |
| [illegible] | 04.59 - 06.29 |
| [illegible] | 12.29 - 01.59 |

# வலிகாமம், தீவகம் பிரதேசங்களில் புகையிலைச் செய்கை தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ.30

வலிகாமம், தீவகம் ஆகிய பிரதேசங்களில் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

புகையிலைச் செய்கையை மேற்கொள்வதற்காக இப்பிரதேசங்களைச் சார்ந்த விவசாயிகள் புகையிலை நாற்றுக்களை வடமராட்சிப் பகுதியில் கொள்வனவுசெய்து தமது பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று புகையிலை நடுகையை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை நாற்றுமேடைக்கு பெயர் பெற்ற பொலிகண்டிப் பகுதியில் இப்பகுதி விவசாயிகளால் அமைக்கப்பட்ட புகையிலை நாற்று மேடைகளிலிருந்து வலிகாமம் தீவகம் பிரசேதங்களைச் சேர்ந்த விவசாயிகள் புகையிலை நாற்றுக்களை பெற்று வருகின்றனர்.

பொலிகண்டிப் பகுதியில் இம்முறை மிகப்பெரிய அளவில் புகையிலை நாற்று மேடைகள் விவசாயிகளால் அமைக்கப்பட்டு பராமரிக்கப் பட்டுவருகின்றன.

(50-23 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் இஸ்ரேல் ருத்ரதாண்டவம்; குண்டுவீச்சில் நேற்றும் 300 பேர் பலி!

டெல் அவிவ், டிச. 30

காஸா நெடுந் துண்டத்திலுள்ள ஹமாஸ் தீவிரவாதப் போராளிகளின் கேந்திர இலக்குகள் மீது நேற்று திங்கட்கிழமை மூன்றாவது நாளாக இஸ்ரேல் யுத்த விமானங்கள் மேற்கொண்ட உக்கிர தாக்குதல்களில் ஏறத்தாழ 300 பேர் வரை உயிரிழந்தனர் என அதிகாரிகளும் பலஸ்தீன வட்டாரங்களும் தெரிவித்தன.

காஸாவில் புரையோடிப் போயிருக்கும் இஸ்ரேல் மீதான வன்மத்தை ஒழித்துக்கட்ட இஸ்ரேல் திடசங்கற்பம் பூண்டுள்ளது. அவசியம் ஏற்படின், தரைவழித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படும் என இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சிபி லிவினி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இறுதி இலக்குகள் ஹமாஸ்களின் இஸ்லாமியப் பல்கலைக்கழகம், உள்துறை அமைச்சு ஆகியவையாகும் என இஸ்ரேலிய வெளி விவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஹமாஸ்களின கட்டுப்பாட்டுக்குள் உள்ள காஸா நெடுந்துண்டத்தில், ஹமாஸ்களின் இலக்குகள் மீதான தன் விமானத் தாக்குதல்களை இஸ்ரேல் சனிக்கிழமை அதிகாலை ஆரம்பித்தது. அதுமுதல் ஹமாஸ்களின் பாதுகாப்பு வலயங்கள், அரச கட்டடங்கள், எகிப்துக்குள் நுழைவதற்கான சுரங்க வழிகள் ஆகியவை நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

நேற்று திங்கட்கிழமை அதிகாலையில், மூன்றாவது நாளாக இஸ்ரேலிய விமானத் தாக்குதல்கள் ஆரம்பமாகின. உள்துறை அமைச்சை அதிசக்தி வாய்ந்த குண்டுகள் தாக்கின. நிலமும் அதிர்ந்தது. அப்பகுதியில் கரும்புகை மண்டலங்கள் எழுந்தன என நேரிற் கண்டவர்கள் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்கள்.

இதற்கு முன்னர், இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடத்தை குண்டுகள் தாக்கின. காஸாவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் இஸ்லாமிய தீவிரவாதப் போராளிகளுக்கு இப்பல்கலைக்கழகமே பெரிதும் ஆதரவளித்து வருகிறது. ஹமாஸிலுள்ள அநேக உயர்மட்ட அதிகாரிகளும் இப்பல்கலைக்கழகத்திலேயே பயின்றுள்ளார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பல்கலைக்கழகம் தாக்கப்படலாம் என ஊகித்து, வளாகத்திலிருந்தவர்களை பல்கலைக்கழக அதிகாரிகள் முன்கூட்டியே வெளியேற்றிவிட்டார்கள் என காஸாவிலுள்ள பி.பி.ஸி. செய்திச் சேவை நிருபர் ஒருவர் தெரிவித்தார்.

''காஸாவிலுள்ள மருத்துவமனைகளில் காயங்களுடன் பெருமளவிலான மக்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இடநெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன'' என வட காஸாவிலுள்ள பைத் வெ ஷியா என்னுமிடத்தில் செயற்படும் சுதந்திர காஸா அமைப்பின் சர்வதேச பெண் உதவிப் பணிப்பாளர் இவா ஜஸிவிஸ் தெரிவித்தார்.

''காஸா மக்கள் நெருக்கமாக வாழும் இடமாகும். இத்தகைய நேரடித் தாக்குதல்கள் இதுவரை இங்கு ஏற்பட்டதில்லை. தற்போதைய உக்கிரத் தாக்குதல்களால் கண்ணாடிகள், ஓடுகள் ஆகியவை சிதறி மக்களின் வீடுகளுக்குள் பறக்கின்றன. குண்டுச் சிதைவுகளும் இவற்றோடு பறக்கின்றன'' என்றும் அவர் விவரித்தார்.

இரண்டாவது நாளான ஞாயிற்றுக்கிழமை தென்காஸாவிலுள்ள கடத்தல் சுரங்கங்கள் இஸ்ரேலிய போர் விமானங்களின் குண்டுத் தாக்குதல்களால் தகர்க்கப்பட்டன. இச்சுரங்க வழிகளையே பலஸ்தீனர்கள் எகிப்திலிருந்து உணவுகள், இதர விநியோகப் பொருள்கள் ஆகியவற்றைக் கொணர்வதற்கு பயன்படுத்தி வந்தார்கள். ஆயுதங்களும் கடத்தப்பட்டு வந்தன என இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.



''தென் காஸாவில் இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் சரமாரியாகக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டபோது, நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் எகிப்திய எல்லைத் தடுப்பை உடைத்துக்கொண்டு எகிப்துக்குள் நுழைய எத்தனித்தார்கள். எனினும், எகிப்திய பாதுகாப்புப் படைகள் எச்சரிக்கை வேட்டுகளைத் தீர்த்து முன்னேறவிடாமல் அவர்களைத் தடுத்துவிட்டன'' என எகிப்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

## காஸா மீதான தாக்குதலுக்காக இஸ்ரேலுக்கு தகுந்த பதிலடி!

பெய்ரூத், டிச. 30

''காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தாக்குதல்களுக்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும்'' என சிரியாவின் தலைநகரான பெய்ரூத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஷியாக்களின் இயக்கமான ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா பேசுகையில் சூளுரைத்தார்.

''குற்றங்கள் புரிவதிலும், வஞ்சிப்பதிலும் கைதேர்ந்த எதிரிக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளோம். எனவே, லெபனானின் தென் பகுதியிலுள்ள எமது ஹிஸ்புல்லா போராளிகளை தயார் நிலையில் இருக்குமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன்'' என்றும் அவர் கூறினார்.

''எங்கள் மண்ணின் மீதோ, நாட்டின் மீதோ கௌரவத்துக்கு எதிராகவோ மேற்கொள்ளப்படும் எத்தகைய ஆக்கிரமிப்பையும் அனுமதியோம். அதனை முறியடித்தே தீருவோம். இதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

லெபனானிலுள்ள ஹிஸ்புல்லா இயக்கத்தின் போராளிகள், 2006 ஆம் ஆண்டு இஸ்ரேலுடன் சண்டையிட்டுள்ளார்கள். இரு சாராருக்குமிடையிலான இச்சண்டை 34 நாள்கள் வரை நீடித்தது. இஸ்ரேல் விமானப் படையையும் இதில் தீவிரமாக ஈடுபடுத்தியது.

இஸ்ரேலிய தாக்குதல்களில் 1,125 இக்கு மேற்பட்ட லெபனானியர்கள் பலியாகியுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோர் சிவிலியன்களாவர். இச்சண்டையில் 160 இஸ்ரேலியர் வரை பலியாகியுள்ளனர்.

## பாக். வட மேற்கில் சிறிய பூகம்பம்

இஸ்லாமாபாத், டிச. 30

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதிகளில் நேற்று திங்கட்கிழமை காலை இலேசான பூகம்பம் தாக்கியது. இதன் காரணமாக வீடுகள், கட்டடங்கள் ஆகியவை குலுங்கின. மக்கள் பீதியடைந்து சாலைகளில் ஓட்டம் பிடித்தனர்.

காலை உள்ளூர் நேரப்படி 8.37 மணிக்கு ஏற்பட்ட இந்தப் பூகம்பம் ரிச்டர் அளவு கோலில் 5.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என பாகிஸ்தான் புவியியல் ஆய்வு மையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும், இந்தப் பூகம்பம் காரணமாக உயிரிழப்போ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை.

## உலக அரங்கில்

## காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு உலக நாடுகள் கண்டனம்; ஆர்ப்பாட்டம்

கெய்ரோ, டிச. 30

ஹமாஸ் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களுக்குக் கடும் கண்டனம் தெரிவித்து எகிப்து, லெபனான், ஜோர்தான், ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன. இவற்றில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஹமாஸ்களின் தோழமைக் கட்சியான எகிப்திய முஸ்லிம் சகோதரக் கட்சியின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை, எகிப்திய நகரங்களில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றன. இவற்றில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருப்பர் என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

லெபனானில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில், பலஸ்தீன அகதிகளும் கலந்து கொண்டார்கள். ஜோர்தானிய தலைநகரான அம்மானில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் பலஸ்தீன அகதிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். ஜோர்தானிலுள்ள அநேக அகதி முகாம்களில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த பலஸ்தீனியர்கள் தஞ்சம் புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கிலுள்ள மொசூல் நகரில் சுனி ஈராக்கிய இஸ்லாமியக் கட்சியின் ஆதரவில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது. பேரணிக்கருகில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் நடத்திய குண்டுத் தாக்குதலில், பேரணியில் கலந்துகொண்ட ஒருவர் பலியானார். 16 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கின் தலைநகரான பக்தாத்துக்கு வடக்கே அமைந்துள்ள சுனி அரேபிய நகரான சமாராவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கலந்துகொண்டார்கள்.

சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ்ஸில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். ஹமாஸ் போராட்ட இயக்க, பலஸ்தீன, சிரிய, ஹிஸ்புல்லாக் கொடிகளை அநேகர் அசைத்தவாறு பேரணியில் வந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இப்பேரணிகளில் இஸ்ரேலிய அமெரிக்கக் கொடிகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். அதேவேளை, இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு பலத்த பதிலடி கொடுக்குமாறு தத்தம் நாட்டுத் தலைவர்களுக்கும் அறைகூவல் விடுத்தனர்.

## கியூபா புரட்சியின் 50 ஆண்டு நிறைவு

ஹவானா, டிச. 30

கியூபாவில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் புரட்சியின் 50 ஆவது நிறைவையொட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி பொன்விழா கொண்டாட அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்விழாவில் பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். கம்யூனிஸ கொள்கையைப் போற்றிவரும் வெனிசூலா ஜனாதிபதி ஹுகோ சாவேஸும், பொலிவிய ஜனாதிபதி இவோ மொரேல்ஸும் இதில் தவறாது கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஹவானாவிலுள்ள செஸ்பெடெஸ் பூங்காவில்தான் கம்யூனிஸ்ட் புரட்சியின் வெற்றி குறித்து பிடல் கஸ்ட்ரோ, மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். இதை கௌரவிக்கும் விதத்தில் அந்தப் பூங்காவிலேயே கம்யூனிஸ புரட்சியின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படவுள்ளது.

பல்ஜென்சியோ பதிஸ்டா என்பவர் கியூபாவில் அமெரிக்காவின் ஆதரவோடு சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்தார். இதை பிடல் கஸ்ட்ரோ கடுமையாக எதிர்த்தார். இதனால், கஸ்ட்ரோவை தீர்த்துக்கட்ட அமெரிக்கா பல்வேறு வழிகளில் முயற்சி செய்தது. எனினும், கடைசி வரை அமெரிக்காவால் கஸ்ட்ரோவை ஒழித்துக்கட்ட முடியவில்லை.

பிடல் கஸ்ட்ரோ தமது துணிவாலும், கடுமையான தொடர் போராட்டத்தாலும் பல்ஜென்சியோ பதிஸ்டாவுக்குச் சரியான பாடம் புகட்டி கியூபா மண்ணில் தான் நினைத்தபடி கம்யூனிஸத்தை மலர வைத்தார்.

அன்று முதல் கியூபா மக்களின் நெஞ்சைவிட்டு நீங்காதத் தலைவராக இருந்துவரும் பிடல் கஸ்ட்ரோ (வயது 82) முதுமையால் உடல் நலக்குறைவு ஏற்பட்டு ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார்.

இதையடுத்து, அவரது சகோதரரும், ஆரம்பத்திலிருந்து அவரது போராட்டத்துக்கு தோள் கொடுத்தவருமான ராவுல் கஸ்ட்ரோ கியூபாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார். அந்த வகையில், ராவுல் கஸ்ட்ரோ கடந்த பெப்ரவரியில் முறைப்படி ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார்.

## ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் 14 சிறுவர்கள் உட்பட 16 பேர் பலி

காபூல், டிச. 30

கிழக்கு ஆப்கானிஸ்தானிலுள்ள கோஷ்ட் என்னுமிடத்தில், தற்கொலைக் குண்டுதாரியொருவர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 14 பேர் சிறுவர்கள். 58 பேர் காயமடைந்தனர் என உள்ளூர் பொலிஸ் அதிகாரி பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

பாடசாலையொன்றுக்கருகிலுள்ள அரச கட்டடத்தை இலக்கு வைத்து, இத்தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் கட்டடத்தின் ஒரு பகுதி தகர்ந்துவிட்டது. காயமடைந்தவர்கள் கோஷ்ட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

இதற்கு முன்னர் தென்கந்தஹார் மாகாணத்திலுள்ள பாஞ்வாய் என்னுமிடத்தில், வீதியோரக் குண்டு வெடிப்பில் சிக்கி, நால்வர் பலியாயினர். இவர்களில் இரு கனேடிய வீரர்கள், அவர்களோடு பணியில் ஈடுபட்டு வந்த ஓர் ஆப்கான் மொழிபெயர்ப்பாளர், ஒரு பொலிஸ்காரர் ஆகியோர் அடங்குவர் என பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்தது.

''இந்த வீரர்கள் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பைக் கட்டியெழுப்ப உதவி வந்தவர்கள். கௌரவத்தோடு தம் உயிரை நீத்துள்ளார்கள்'' என பாதுகாப்பு உதவிப் படைப் பேச்சாளர் ஒருவர், தான் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானில் 2002 ஆம் ஆண்டு, கனேடிய வீரர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அது முதல் இதுவரை, 103 வீரர்கள் பலியாகியுள்ளார்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரம் மேலும் தெரிவித்தது.

## புதுவகையான கார்க் குண்டுவெடிப்பு; பாகிஸ்தானில் 33 பேர் உயிரிழப்பு!

''இயந்திரக் கோளாறு ஏற்பட்டு விட்டது. காரைத் தள்ளுங்கள்'' என பாகிஸ்தானில் ஒருவர் விடுத்த வேண்டுகோளை நம்பி, காரைத்தள்ளிய வாக்காளர்களில் 23 பேர், அந்தக் காரில் இருந்த பாரிய குண்டு வெடித்ததில் பலியாயினர். கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். மொத்தம் 33 பேர் பலியாயினர்.

வடமேற்குப் பாகிஸ்தானின் எல்லைப்புற மாநிலத்திலுள்ள புனார் மாவட்ட வாக்குச் சாவடிக்கருகில் இக்கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. பலியானோரில் நால்வர் சிறுவர்களாவர் என உள்ளூர் பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டார்.

மாநில சட்ட சபைக்கான இடைத்தேர்தல் புனார் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாக்குச் சாவடி இயங்கிக் கொண்டிருந்த பாடசாலைக் கட்டடத்துக்கருகில், பயங்கரமாக இந்தக் குண்டு வெடித்தது என்றும் அவர் விவரித்தார்.

''இக்குண்டுவெடிப்பில் பாடசாலைக் கட்டடம் தகர்ந்து விழுந்தது. இடிபாடுகளுக்குள் சிக்கி 10 பேர் பலியாயினர். மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் சிலர் இடிபாடுகளுக்குள் சிக்குண்டிருக்கலாமென அஞ்சப்படுகின்றது. மரணித்தவர்களில் இரு பொலிஸாரும் அடங்குவர்'' என்றும் அவர் கூறினார்.

''தற்கொலைக் குண்டுதாரி, வாக்குச் சாவடிக்கருகில் தன் காரை நிறுத்தியுள்ளார். பின்னர் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு விட்டது, தள்ளுங்கள் என கூடியிருந்த வாக்காளர்களைக் கேட்டுள்ளார். அவர்கள் காரைத் தள்ளும்போது, குண்டை வெடிக்க வைத்துள்ளார்'' என வட-மேற்கு முனைத் தகவல் அமைச்சர் மியான் இப்திகார் ஹுஸைன் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளியன்று சந்தியான் ஆச்சிரமத்தில் திருவாசக விழா

வடமராட்சி, டிசெ.30

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் திருவாசக விழா எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவையின் போஷகர் பிரம்மஸ்ரீ ப.மனோகரா குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழா ஆரம்பத்தில் செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும், திருவாசக ஏடுகளும் கோவிலில் இருந்து ஆச்சிரமம் வரை ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

அதனைத் தொடர்ந்து கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ச.லலீசன் ''உன் கையிற் பிள்ளை'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். அடுத்து வாரந்த நிகழ்வில் மறவனூர் ரி.எம்.வாசகர் குழுவினரின் தவில் இசை இடம்பெறும்.

மாணவர் நிகழ்வில் திருவாசக விழாவையொட்டி நடத்தப்பட்டபண்ணிசைப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும், பரிசளிப்பும் நடைபெறும். (202-236)

# கூடுதல் விலைக்கு அரிசி விற்ற வர்த்தகர்கள் கொழும்புப் பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டனர்

கொழும்பு, டிசெ.30

அரிசியை நிர்ணய விலையைவிடக் கூடுதல் விலைக்கு விற்ற நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தகர்கள் கடந்த வாரம் மூன்று தினங்களில் சுற்றி வளைக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவிக்கின்றது.

இந்த வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகார சபையின் தலைவர் றோமி மஸ்ற்ரோ கூறியுள்ளார்.

கொழும்பின் புறநகர்ப் பிரதேசங்களில் நேற்றுமுன்தினமும் சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை நுகர்வோரை தெளிவுபடுத்துவதற்காக நடமாடும் சேவை ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவிக்கின்றது.

மக்கள் செறிவான பகுதிகளில் நடத்தப்படும் இந்த நடமாடும் சேவையின் போது நுகர்வோர் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியுமென அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

முறைப்பாடுகளுக்கு உடனடியாக அந்தந்த இடத்திலேயே தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (சி)

# தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் சேவை; பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.30

பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்து தேசிய பாடசாலைகளில் இணைப்புச் செய்வதற்கென நேர்முகப்பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்டோருக்கு இங்கேயே பரீட்சை நடத்தப்படவுள்ளது.

அடுத்த மாதம் 12 ஆம், 13 ஆம் திகதி திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

சகலருக்குமான நேர்முகப்பரீட்சை கொழும்பில் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிப்போர் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், ஜி.சீ.ஈ சாதாரண தர, உயர்தர சான்றிதழ்கள் பட்டச் சான்றிதழ், போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் உறுதி என்பவற்றின் மூலப்பிரதி மற்றும் போட்டோப் பிரதிகளுடன் வருகை தருமாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் விவரம் பாடரீதியாக வருமாறு:

**இந்துசமயம்**

என்.மாதங்கி (கைதடி கிழக்கு)

**இணைந்த கணிதம்**

ஜோன்.செமிந்திரன் (நாவாந்துறை)

**இரசாயனவியல்**

கே.கஜேந்திரன் (அளவெட்டி தெற்கு), கே.கஜபதி (யாழ்ப்பாணம்), ஜி.சசிகேஸ் (இளவாலை வடக்கு)

**உயிரியல்**

ஜி.பிரதிபா காயத்திரி (கொக்குவில் கிழக்கு).

**நடனம்**

ஜி.வி.பாலராஜா (யாழ்ப்பாணம்).

**கீழைத்தேச சங்கீதம்**

எஸ்.விணோதினி (கரவெட்டி), ரி.ராஜேந்திரகுமார் (மானிப்பாய்), கே.பிறேமமாலினி (புலோலி மேற்கு), ரி.தயாளினி (பண்டத்தரிப்பு), ஆர்.ஜெயகாந்தன் (ஊர்காவற்றுறை).

**கணக்கியல்**

எஸ்.யமுனா(சுன்னாகம்), வி.சாருமதி(புன்னாலைக்கட்டுவன் வடக்கு).

**பாடவழி கா. ஆலோசனை**

எ.நிதலவரன்(பொலிகண்டி கிழக்கு), சி.லின்ரஸ்(யாழ்ப்பாணம்).

**புவியியல்**

எஸ்.பிரபாகரன்(சுதுமலை வடக்கு), வி.உதீஸ்(திருநெல்வேலி).

**தகவல் தொழில் நுட்பம்**

பி.ஜெகசுகன்(கொக்குவில் கிழக்கு), எஸ்.கணேசமூர்த்தி(புலோலி தெற்கு), எஸ்.சுபோதினி(பொன்னாலை மேற்கு), ஆர்.ஜயன்(கொக்குவில்), ஈ.ஆர்.பி.ராஜநாதன்(இளவாலை), ரி.மதியழகன் (நல்லூர்), சி.அனோஜா(புலோலி தெற்கு), ரி.துஸ்யந்தன்(ஏழாலை மேற்கு).

**தமிழ்**

ரி.முகுந்தன்(நாவலடி), வி.ஞானசம்பந்தன்(நெல்லியடி), வி.நந்தகுமார் (புலோலி மேற்கு).

**மனையியல்**

எம்.ஜெயந்தன்(புத்தூர் கிழக்கு).

**ஆங்கிலம்**

கே.யோகன்ராஜ்(தாவடி தெற்கு), எம்.அலோசியஸ்(சில்லாலை தெற்கு), ரி.தேவகி(பொலிகண்டி), எம். குமுதினி (தும்பளை), கே.வசந்தமாறன் (யாழ்ப்பாணம்), பி.சுபாஜினி(அச்சுவேலி வடக்கு), வி.சிவாநந்தினி (யாழ்ப்பாணம்), ஆர்.மேகலா(அரியாலை மேற்கு).

**அளவையியலும் விஞ்ஞான முறைகளும்**

கே.சுதர்சன்(சித்தங்கேணி).

**அரசியல் விஞ்ஞானம்**

ரி.ரவிச்சந்திரன்(மானிப்பாய்).

**பொருளியல்**

ரி.கணேஸ்வரன்(கோப்பாய் தெற்கு), ஐ.இலங்கேஸ்வரன்(நவாலி தெற்கு), பி.தயாளினி(காரைநகர்), ஜே. ஜெனிற்றா (பாசையூர்), கே.விக்னரூபன் (கொக்குவில் மேற்கு), இ.வி.நிர்மலன்(ஏழாலை கிழக்கு), என்.தணிகைக்குமரன்(சுழிபுரம் மத்தி), என்.இ.தமிழ்ச்செல்வன்(கைதடி தெற்கு).

**மேலைத்தேய சங்கீதம்**

ரி.யசோதரன்(உடுவில் கிழக்கு).

**சித்திரம்**

ஏ.வைகுந்தன்(அல்வாய் கிழக்கு), வி.பாஷ்கர்(கரவெட்டி தெற்கு), என்.வாகீசன்(யாழ்ப்பாணம்).

**சிங்களம்**

எல்.சி.ஆனந்தா(ஆனைக்கோட்டை), ஆர்.இராஜகோபாலன்(சங்கானை), ரி.பகிரதன்(நல்லூர்), எஸ்.சிவஞானவதி (கொக்குவில் கிழக்கு), ரி.பிரிஜட் ரேணுஜா (சங்குவேலி வடக்கு).

**வியாபாரக் கற்கை**

எஸ்.முரளிகரன்(பருத்தித்துறை), கே.சுரேஸ்குமார்(குப்பிளான் தெற்கு), இ.சுதர்ஸ்(குப்பிளான் வடக்கு), எஸ்.கிருஷ்ணகுமார்(குப்பிளான்), எம்.தரணிதரன் (வட்டு கிழக்கு), என்.லதா(காரைநகர்).

**விவசாயம்**

வை.தயாளன்(யாழ்ப்பாணம்).

**வர்த்தகப் புள்ளி விபரவியல்**

பி.சேயோன்(சுன்னாகம்).

**வரலாறு**

கே.சுதாகரன்(பிறவுண் றோட்).

# மரக்கறித் தட்டுப்பாட்டுக் காலத்தில்......

யாழ்ப்பாணம், டிசெ.30

குடாநாட்டை நிஷா புயலும் வெள்ளமும் தாக்கியதில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டமை தெரிந்ததே. அவற்றில் மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும், சில மரக்கறிகள் ஆயிரம் ரூபா விலையை எட்டியமையும் தெரியும்.

இந்த விலையேற்றத்தைச் சமாளிக்க முடியாது மக்கள் பெரும் திண்டாட்டம் அடைந்தனர்.

மரக்கறிகளுக்குத் தட்டுப்பாடு நிலவும்போது நாம் செய்யக்கூடிய சில உணவு வகைகள் இவை:

தூதுவளை, முசுட்டை, பன்றித் தகரை என்பவைகளை பொரித்து அல்லது வதக்கி குழம்பு செய்யலாம்.

மலிவாகக் கிடைக்கும் கோது உள்ள பருப்பை நனைய வைத்து அரைத்தோ, அவித்தோ, பொரித்தோ குழம்பு செய்யலாம்.

வாழைத்தண்டை, வாழைப்பூவைப் கொத்துவது போல் கொத்தி உப்பு நீரில் போட்டு பிழிந்து எடுத்து வதக்கி குழம்பு, பருப்புடன் கூட்டு செய்யலாம்.

வெந்தயக் குழம்பு, மற்றும் மாங்காய் குழம்பு சமைத்துச் சாப்பிடலாம். கறையான் புற்றுக்களில் இருந்து வரும் மொட்டுக் காளான் (மழைக்காலங்களில் வரும்போது) சமைக்கலாம்.

சுண்டக்காய், வட்டுக்கத்தரி என்பவற்றைப் பொரித்து குழம்பு, பொரியல் செய்யலாம்.

தகவல்:
ஆர். பத்மா (கொக்குவில்).

## ஒன்றுகூடல்

வடமராட்சி,டிசெ.30

பருத்தித்துறை- கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளின் ஒன்றுகூடல் தும்பளையில் உள்ள நேசகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (202-236)

## ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.வலயப் பாடசாலைகளில் தரம் 8 வகுப்புகளில் சுகாதாரமும், உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆசிரிய வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் தெரிவித்துள்ளார். (203)

## கப்பல் பயண அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ.30

வடமாகாண பொதுநிர்வாக அமைச்சினால் முகாமைத்துவ உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள 55 பேருக்கும் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களாக, நியமனம் செய்யப்பட்டுள்ள 42 பேருக்கும் பயண ஒழுங்குகள் இன்று செவ்வாய்க்கிழமை செய்யப்பட்டுள்ளதாக யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

எனவே தெரிவுசெய்யப்பட்டவர்களை பிரயாண ஏற்பாடுகளுடன் இன்று காலை 8 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (202)

## ஆயுள்வேத வைத்தியசாலை இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்ப்பாணம் மாநகரசபையினால் நாவாந்துறைப் பகுதியில் நடத்தப்பட்டு வந்த இலவச ஆயுள்வேத வைத்தியசாலை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் சபைக்குச் சொந்தமான முஸ்லீம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

இவ்வைத்தியசாலை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரையும் சேவை வழங்கும் என்று யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார். (202)



பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நடமாடும் பதிவுச் சேவையின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி ம.இராசரத்தினம், பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் காணலாம். பயனாளிகளில் ஒருபகுதியினரை இறுதிப் படத்தில் காணலாம். (70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவுகளில்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 12 |
| * | * |
| 05 | 12 |
| * | * |
| 1919 | 2007 |



### திருமதி வள்ளி சங்கரன்

*திதி: திருதியை [30.12.2008]*

*ஆண்டொன்று சென்றாலும் அம்மா ஆறாது எம்துயரம்*
*பாசத்தின் உறைவிடமாய் நன்னெறி தவறாது வாழ்ந்து*
*எமக்கு வ்ாழ வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின்*
*ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல*
*இறைவனை வேண்டி நிற்கின்றோம்.*

*''மிசாந்தமகால்''*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* குடும்பத்தினர்.

(81290)

## தவறிவிட்டது

இனுவில் தெற்கு, இனுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவனடியான் சிவதர்சன் என்பவரது தேசிய அ.அட்டை (911252422 V) 24.12.2008 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பெஷன் கவுஸ், 65, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.3034.

## இலங்கை வங்கிக் கிளைகள் நாளை திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், டிசெ.30

இலங்கை வங்கியின் சகல கிளைகளும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10 மணிவரை வாடிக்கையாளர் சேவைக்காக திறந்திருக்கும் என வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரத்தினம் தெரிவித்தார்.

வருட இறுதி வேலைகள் காரணமாகவே நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(202)

## குடாநாட்டுப் புகையிலை தென்பகுதிக்கு

வடமராட்சி, டிசெ.30

யாழ்.குடாநாட்டு உற்பத்திப் பொருளான புகையிலை கடந்த வாரம் கப்பல் மூலம் தென் பகுதிக்கு ஏடுத்துச் செல்லப்பட்டது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஒரு தொகுதி புகையிலைச் சிப்பங்களை வடமராட்சியிலும் ஏனைய பிரதேசங்களிலும் உள்ள விவசாயிகளிடமிருந்து தனியார் வர்த்தகர்கள் பெற்று காங்கேசன் துறைக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

அவை காங்கேசன் துறையில் பொருள்களை இறக்கி முடித்த கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டு சந்தைப் படுத்துவதற்காக தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளன.

(202-236)

## சீருடை விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.30

இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலய மாணவர்களுக்கான சீருடை விநியோகம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களின் பெற்றோரும் தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களையும் வருகை தந்து சீருடையைப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

(202)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre

*நாதன்ஸ் சினிமா முன்பாக (மேல் மாடியில்)*

Spoken English with Grammar, ''சிங்களம்'' Short Hand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன. வெளிநாடு செல்பவர்களுக்கு இலகு வான முறையில் ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேசக் கற்றுக் கொடுக்கப்படும்.

**புதிய பிரிவு ஆரம்பம்:- 01.01.2009**

பாடமுடிவில் ''சான்றிதழ்'' வழங்கப்படும்.

(81286) நிர்வாகி:- இ.லோகநாயகி

## ஹிருதய பூர்வமான நன்றிகள்





சென்ற (26.12.2008) வெள்ளிக்கிழமை நடந்தேறிய எங்கள் புத்திரர்களின் ஆயுஷ்யஹோம விழாவின்போது, மனோன்மணி கல்யாண மண்டபத்தை வழங்கிச் சிறப்பித்த ஆலய தர்ம பரிபாலன சபையினருக்கும், மனோன்மணி சன்சமூக நிலைய இளைஞர்களுக்கும் மங்கள இசைவழங்கிய கலைஞர்களுக்கும் மற்றும் வருகை தந்து சபையை சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகள் பல பல உரித்தாகுக.

நந்தாவில்,
கொக்குவில்.

பிரம்மஸ்ரீ ச.ஸ்ரீசந்தனக்குருக்கள்
வத்சலா *(தம்பதியர்)*

## நீங்காத நினைவுகள்

| 18ஆம் ஆண்டு | | இரண்டாம் ஆண்டு | |
|---|---|---|---|
| மலர்வு | உதிர்வு | மலர்வு | உதிர்வு |
| 05 | 17 | 03 | 23 |
| * | * | * | * |
| 04 | 05 | 07 | 12 |
| * | * | * | * |
| 1907 | 1991 | 1924 | 2006 |





**அமரர் கந்தசாமி ஞானசுந்தரம்** **திருமதி ஞானசுந்தரம் மகேஸ்வரி**

*திதி: திருதியை [30.12.2008]*

எங்கள் உயர்வுக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வங்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி ஸ்ரீபாலா பிரேமரதி
*461, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(81284)

## கண்ணீர்க் காணிக்கை

எமது வித்தியாலய கல்விசாரா ஊழியர்
திரு வி.பொன்னம்பலம் அவர்களின் பாசமிகு தந்தை

### வைத்திலிங்கம் விஸ்வநாதர்

அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
யா/கோடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

(81280)

# 3ஆம் ஆண்டு நினைவு நாளில்...

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

## திருமதி தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை

*(ஜெகதா ஹாட்வெயர்ஸ், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்,*
*ஜெகதா மொபைல் உலகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)*

**திதி: வளர்பிறை திருதியை (30.12.2008)**




*காலனும் தன் கணக்கைக் கணப்பொழுதில் முடித்துவிட*
*ஆண்டுகள் மூன்று அவனியிலே கரைந்து விட்டதம்மா!*
*கண்டது கனவென்று கண் திறந்து பார்க்கின்றோம்*
*கண்முன்னே நின்னுருவம் கண்ணீரில் கரைகிறது*
*காரிருள் சூழ்ந்த பாரினும் எமையெல்லாம் தவிக்கவிட்டு*
*வானுலகம் சென்று விட்ட ஜெகதாவே!*
*நீ! இல்லாத வீடு நிலவில்லாத வானமாகியது*
*நீ! இல்லாது சொந்தங்கள் சிதறிப்போனது*
*உனை நேசித்த பந்தங்கள் உதிர்ந்து போனது*
*உனையிழந்த சேயிரண்டும் தன் வழியை நாடிட*
*தயையின்றித் தவிக்கிறேன் உனை எண்ணி நாளும்*
*நிலைத்து விட்ட நின் அன்பால் நினைவிழக்க முடியாமல் அம்மா!*
*உன் நினைவுகளுடன் வாழ்ந்து போகிறோம் உயிர் உள்ளவரை.*

பிரிவால் துயருறும்:
*கணவர்* - நா.தெட்சணாமூர்த்தி
*மகன்மார்* - தெ.நிஷாகரன், தெ.நிஷாந்தன்
*மருமகள்மார்* - நி.மலர்மதி, நி.ஸ்ரீமகள்
*பேர்த்தி* - நிஷாகரன் ஜனனி.

*145/3, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P. 021 222 3169*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பு வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை ஐக்கிய வி.கழகம் மூன்றாமிடம்

வலி.வடக்கு,டிசெ.30

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட [illegible]கம் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய கலப்பு வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 3ஆம் இடத்திற்கான போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் இறுதிவரை சளைக்காது போராடின. இறுதியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

எதிரணியினர் புள்ளிகள் பெறுவதைத் தடுத்து இரு அணியினரும் விளையாடியமையால் எதிர்பார்த்ததைப் போன்று அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

பெரும் சிரமத்துடன் பந்தை கடத்திச் சென்று வலையினுள் போட வீரர்கள் எத்தனித்தபோதிலும் கோல் காப்பாளர்கள் பெரும் தடை போட்டதால் எதிரணியினருக்குப் புள்ளிகள் பெறும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

ஆட்ட நிறைவில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 10:5 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உடற்கல்வி அணியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (202-86)

## சங்கப் பணியாளர்களுக்கு நியாய விலையில் அத்தியாவசியப் பொருட்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு நியாய விலையில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன எனச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

சீனி, மா, அரிசி, குளிர்பான வகைகள் உட்பட மற்றும் சில பொருள்கள் நியாய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. (202-224)



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவினர் தமது பிரிவுக்கு உட்பட்ட பொதுக்கிணறுகளை இறைத்து சுத்தம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக அண்மையில் கோப்பாய் கன்னி மரியாள் தேவாலயக் கிணற்றை இறைத்துச் சுத்தம் செய்தபோது எடுக்கப்பட்ட படம்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவுச் செயலர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா, தேவாலயக் குரு அருட்திரு ஜெகன்மோகன் அடிகளார் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: லக்ஷ்மன்)*

# அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் காலமறிந்து செயற்படவேண்டும்

## சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் கருத்து

சித்தங்கேணி,டிசெ.30

பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் காலத்தின் தேவை உணர்ந்து செயலாற்றுல் வேண்டும். தங்களின் குடும்ப நிலைகளுக்கும் அப்பால் வந்து சேவையாற்றிய பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், பொதுமுகாமையாளர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

இவ்வாறு தெரிவித்தார் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம்.

மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச மட்ட திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

வெதுப்பகத்தினுள் வெள்ளம் புகுந்து கூரைத்தகடுகள் தூக்கி வீசப்பட்ட நிலையிலும் கூட எமது அவசர வேண்டுகோளை ஏற்றுப் பாண் உற்பத்தி செய்து தமது கிளைகளினூடாக விற்பனை செய்தும், எம்மால் நடத்தப்பட்ட நலன்புரி நிலையங்களுக்கும் தந்துதவியுமுள்ளனர். அதுமட்டுமல்லாது பிரதேசத்தில் எம்மால் கண்காணிக்கப்பட்டு வந்த நலன்புரி நிலையங்களுக்குமான உணவுப் பொருள்களை வெள்ளத்தின் மத்தியிலும் களஞ்சியங்களைத் திறந்து கிளைகளில் இருந்து உணவுப் பொருள்களைத் தந்துதவியிருந்தார்கள்.

கிராம உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் ஆகியோர்களைத் தவிர வேறு எந்த சமூக மட்ட அமைப்புகளையும் சில இடங்களைத் தவிர காணமுடியவில்லை. எமது அனர்த்த முகாமைத்துவக் குழு பயிற்சிகளுடனும் கூட்டங்களுடனும் மட்டுமே நின்று விடுகின்றன. அவர்கள் தமது சங்கங்கள் அமைப்புகள் என்பவற்றின் நோக்கம், வரைவிலக்கணங்களை உணர்ந்து பண்டத்தரிப்பு ப.நோ.கூ. சங்கத்தை முன்னுதாரணமாகக் கொண்டு இனிவரும் காலங்களிலாவது செயற்படமுன்வரவேண்டும் - என்றார். (201-112)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.30

நாவாந்துறை, கொட்டடி பகுதிகளைச் சேர்ந்த வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி கடந்த வாரம் ஏற்றப்பட்டது

இந்தத் தடுப்பூசி ஏற்றும் பணி வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்தத் தடுப்பூசி நூற்றுக் கணக்கான வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்பட்டது. (202-224)

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 19ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 19ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாற்று வலுவுடையோரிடையே நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க ஆண்டுவிழா பெப்ரவரி மாதம் நான்காம் திகதி நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு மாற்று வலுவுள்ளோரிடையே என்வலப் ஒட்டுதல், தையல், கேக் ஐசிங், மாலை கட்டுதல், சித்திரம் வரைதல், கோலம் போடுதல், சங்கீதம், நடனம், கவிதை, கட்டுரை, திருக்குறள் மனனம், சிறுவர் விளையாட்டு -

விளக்குமாறு அடித்தல், கதிரை பின்னுதல், வினோத உடை, துவிச்சக்கர வண்டி ஓட்டம், முச்சக்கர வண்டி ஓட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஒருவர் ஆகக்கூடியது மூன்று போட்டிகளில் பங்குபற்றமுடியும்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் 'வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம், இல.100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு' என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா கேட்டுள்ளார். (203)

## சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு

வலி.வடக்கு,டிசெ.30

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் 2009ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பங்களை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குப் பிரதேச செயலக விளையாட்டு அலுவலரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-86)

# மத்திய மாகாணத்தில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்கும் உரிமையை இழக்கும் அபாய நிலையில்

கொழும்பு,டிசெ.30

''மத்திய மாகாணசபைத் தேர்தலை ஒட்டி தான் நடத்திய ஆய்வின் அடிப்படையில் மத்திய மாகாணத்தில் மட்டும் தகுதியுடைய வாக்காளர்கள் 77 ஆயிரம் பேரிடம் தேசிய அடையாள அட்டை இல்லாததால்அவர்கள் வாக்களிக்கும் உரிமையை இழந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளதென சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான அமைப்பான கெபே அமைப்பும், நுவரெலியா மாவட்ட அரச அதிபரும் தமது அறிக்கைகள் மூலம் வெளியிட்டுள்ளனர்.''

- இவ்வாறு பிரிடோ வலையமைப்பு அமைப்பாளர் என்.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வாக்களிக்கும் தகுதி இருந்தும் பதிவு செய்யப்படாத காரணத்தால் சுமார் 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர் வரையிலானோர் வாக்களிக்கும் உரிமையை இழந்துள்ளனர்.

தற்போது இந்த 75 ஆயிரம் பேரையும் சேர்த்தால் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களிக்கமுடியாமல் போகும் சூழ்நிலையில், மாகாண சபைத் தேர்தலில் மலையக மக்களின் பிரதிநிதித்துவத்துக்கு ஏற்படப்போகும் பாதிப்பு பாரதூரமாக இருக்கும் - என்றுள்ளது.

## சீருடைத்துணிகள் உரப்பைகளில்

யாழ்ப்பாணம்,டிசெ.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் இம்முறை உரப்பைகளில் கட்டப்பட்ட நிலையில் கொண்டு வரப்பட்டுள்ளன.

வருடாந்தம் அளவுகளின்படி பெட்டிகளில் வைக்கப்பட்டுக் கொண்டு வரப்படுவதே வழமையாக இருந்தது. இம்முறை கப்பலில் கொண்டுவரப்பட்ட சீருடைத் துணிப் பெட்டிகள் சிதைவடைந்ததால் உரப்பைகளில் கட்டிக்கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அளவுகளின்படி தெரிவு செய்யும் பணி அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)



வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 41ஆவது,ஆண்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி [illegible] மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.
கலைநிகழ்வில் ஒரு காட்சியையும் பார்வையாளரில் ஒரு பகுதியின[illegible] காணலாம். *(படங்கள்: சுந்தர)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சங்கீத வித்துவான்

**அமரர் க. இராமநாதன்**

(முன்னாள் விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைப்பீடம்)

தோற்றம் 12*10*1950 மறைவு 30*12*2007

எமது கண்ணீர் அஞ்சலி.

நீர்வேலி. (81099)

குமாரசதாசிவசர்மா (மைத்துனர் குடும்பம்).

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 * 04 * 1942



மறைவு 23 * 12 * 2006

**அமரர் கதிரவேலு பரமநாதன்**

திதி: திருதியை (30.12.2008)

எம் குடும்பத்தின் குலவிளக்கே!
உம்மை இழந்து ஈராண்டுகளானாலும்
என்றும் எம்முடனே வாழ்ந்துகொண்டிருப்பீர்.

தாவளை இயற்றாளை, கொடிகாமம். (81173)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

**சந்திரலிங்கம் கனகம்மா**

(மல்லி அக்கா)

தோற்றம் 19*01*1944

மறைவு 30*11*2008

கடந்த 30.11.2008 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்தும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் ஆறுதல் கூறியும், உதவிகள் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.எம்.எஸ். லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (எ/556289)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 28 * 03 * 1957



விண்ணுலகில் 11 * 01 * 2008

**அமரர் தம்பையா கணேசமூர்த்தி**

நாள்கள் உருண்டு மாதங்கள் ஓடி
வருடம் ஒன்றாகி விட்டாலும் உங்கள்
நினைவு எங்கள் உள்ளத்தில் அல்லும் பகலும்
வேதனையைத் தருகின்றது.
மண்ணுலகில் ஒளியாகி இருந்த நீங்கள்
விண்ணிலும் ஒளிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோல் நிலையம் அருகில், K.K.S. வீதி, சுன்னாகம். (81254)

குடும்பத்தினர்.

## மாத்தறை சிறைச்சாலையிலிருந்து தப்பமுயன்ற இருவர் சுட்டுக்கொலை

மாத்தறை, டிசெ.30

மாத்தறை சிறைச்சாலையிலிருந்து தப்பியோட முற்பட்ட கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு நான்கு கைதிகள் தப்பியோட முயன்றனர். அப்போது அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். தப்பிச்சென்ற ஏனையோரைத் தேடிச்சென்ற அதிகாரிகள் நேற்றுமுன்தினம் காலை மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இன்னொருவரும் உயிரிழந்தார். மற்றையவர்களைப் பிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. - என்று சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார். (சி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.30

வலி.வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கும் தொழில் பயிற்சி நிலையத்தில் 2005 ஒக்ரோபர் தொடக்கம் இவ்வருடம் ஜூலை வரை பயிற்சி பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட பயிற்சியாளர்களுக்குப் பரீட்சை நடத்துவது தொடர்பாகத் தேசிய கைத்தொழில் அதிகார சபை இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. (202)

## முகாமைக்குரு இடமாற்றம்

வடமராட்சி, டிசெ.30

பருத்தித்துறை - கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை முகாமைக்குரு வணபிதா டேவிட் அழகராசா ஜனவரி மாதம் கல்முனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவரின் இடத்திற்கு பருத்தித்துறைப் பிரிவில் குருவாகப் பணியாற்றிய வணபிதா என்.அருள்நாதன் நியமனம் பெற்றுள்ளார். (202-236)

## கொட்டடி நமசிவாய ஆசிரியர், மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், டிசெ.30

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு சீருடை விநியோகிக்கப்படவுள்ளது.

எனவே சகல மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் ரி.சோமசேகரம் கேட்டுள்ளார். (202)

## மரக்கன்றுகள் விநியோகம்

ஆனைக்கோட்டை, டிசெ.30

'நிஷா' புயலால் அழிவடைந்த மரங்களுக்குப் பதிலாக மீள் மரநடுகையை மேற்கொள்வதற்குத் தேவையான மரக்கன்றுகளை ஜனவரி முற்பகுதியில் வலி.தென்மேற்குப் பிரதேச சபை விநியோகம் செய்யவுள்ளது.

மரக்கன்றுகள் தேவையானவர்கள் விவரங்களைத் தந்துதவுமாறு பிரதேச சபை கேட்டுள்ளது. (203-20)

## வீதியோரங்களில் வைத்து மீன்கள் விற்பனை; போக்குவரத்து நெருக்கடி

யாழ்ப்பாணம், டிசெ.30

யாழ்.சின்னக்கடை மீன் சந்தைப் பகுதியில் வீதியோரங்களில் வைத்து மீன்கள் விற்பனை செய்யப்படுவதால் அந்த வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாது நெருக்கடி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீதியோரங்களின் மீன்களை வைத்து விற்பனை செய்வதைத் தவிர்த்து போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-224)

## திருத்தப்பட்ட வீதி மீண்டும் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ.30

பண்ணாகம் முதலாம் குறுக்குத்தெரு வீதி, விசவத்தனை வீதி ஆகியன தார் ஊற்றப்பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளபோதிலும் மீண்டும் இந்த வீதிகள் சேதமடைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த வீதிகளுக்கு ஒரு தடவையே தார் ஊற்றப்பட்டதாகவும் இரண்டாவது தடவை தார் ஊற்றப்படாமையால் கற்கள் கிளம்பி வீதி மீண்டும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த வீதியால் போக்குவரத்துச்செய்ய முடியாதுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த வீதி நீண்டகாலத்தின் பின்னர் புனரமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-28)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

**நாகராசா கருணாவதி**

(பரிசாரகர் யாழ்.போதனாவைத்தியசாலை)

மலர்வு 27*03*1963

உதிர்வு 12*01*2005

திதி: திருதியை 30.12.2008



உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி, கைதடி கிழக்கு. (80782)

என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 27 * 06 * 1994



விண்ணில் 11 * 01 * 2008

**ஆனந்தராசா குமணன்**

(யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 8ஆம் ஆண்டு மாணவன்)

திதி: திருதியை (30.12.2008)

ஆண்டொன்று போனதய்யா
உன் முகம் கண்டு
பாசத்தால் கட்டியாண்டு
பண்புடன் வளர்த்தெடுத்து
அன்புடன் கோயிலதாய்
எம் நெஞ்சில் கொண்டவனே
மாசுபடா உன் திருவுருவம் என்றும்
எம் நெஞ்சில் நிலைத்து வாழும்.

ஜனசக்தி வீதி, சிறுப்பிட்டி மேற்கு. (80771)

என்றும் உன் நினைவுடன்: அம்மா, தங்கை, குடும்பத்தினர்.

## ஆத்மசாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 05 * 03 * 1935



உதிர்வு 15 * 12 * 2008

**அமரர் வேலுப்பிள்ளை சந்திரம்பிள்ளை**

எத்தனை ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்ற சொல்லுக்கு ஈடாகுமா!
பொன் பொருள் இல்லையென்றாலும்
அன்பையும் அறிவையும் பண்பையும் சொல்லி
வளர்த்த தந்தையே!
உன்னை என்றும் மறக்கமுடியுமோ அப்பா!
அன்னை பிரிந்து எட்டு மாதங்களிலே
பூலோகம் வெறுத்து புண்ணியலோகத்துக்கு
உங்களை அழைத்துவிட்டாரே அப்பா!
எங்களை எல்லாம் ஆறாத்துயரத்தில் விட்டு
அன்னையிடம் சென்றுவிட்டீர்கள் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியை நிகழ்வுகள் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்த எல்லோருக்கும் அனைத்து உதவிகள் செய்த அனைவருக்கும் அபிபாதங்கள் தந்து உதவியவர்களுக்கும் மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை தயவுசெய்து தனி அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி, பழனி கோயிலடி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (81277)

என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி ஒளிவிழாவை முன்னிட்டு நடத்திய நாடகப்போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற நாடகமான 'விடிவை நோக்கி'யில் ஒரு காட்சி.
*(படம்: த.பரமலிங்கம்)*



தெல்லிப்பளை ...பன்புலம் மகாவித்தியாலய நிறுவுனர் நினைவுநாளும் பாடசாலை பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. விழாவில் மாணவர்கள் வழங்கிய நாட்டிய நிகழ்வைப் படத்தில் காணலாம்.
(86)



புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புலமைப் பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் உரையாற்றுவதையும் இயங்குநர் சபைத் தலைவர் என்.கணேசலிங்கம், மக்கள் வங்கி முகாமையாளர் எம்.சிவநேசன், உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.
(218)



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் போசாக்குக் குறைபாடுடைய பிள்ளைகளுக்கு பசுப் பால் கொடுக்கும் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட உடுவில் பிரதேச செயலாளர் திருமதி சதீசன மஞ்சுளாதேவி, உதவிப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன், கணக்காளர் ஜே.எலிசன், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.குமாரவேல் ஆகியோர் உட்பட விருந்தினர்களுடன் சிறுவர்கள் காணப்படுகின்றனர். (படங்கள்: நேசன்)



கோப்பாய் கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் 14வயதுப் பிரிவு அணியினர் அதிபர், ஆசிரியர்களுடன் (72)



சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆனைப்பந்தி குருகுல மண்டபத்தில் அண்மையில் சர்வானந்தமய பீடத்தின் புத்தகக் கண்காட்சியும் சமஸ்கிருத சங்கீத இறுவட்டுகளின் வெளியீடும் இடம்பெற்றன.

நிகழ்வில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய பிரதமகுரு க.ச.சோமஸ்கந்தக் குருக்கள் உரையாற்றுவதையும் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள், வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் சிவநாதன், கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சத்தியசீலன் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



பண்ணாகம் மகா வித்தியாலயத்தில் தரம் 5 இல் கற்பித்த ஆசிரியை திருமதி சாந்தினி சிவலோகநாதன் பாடசாலையில் நடைபெற்ற விழாவில் [illegible] பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.



வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழாவில் அகில உலக சைவக்குருமார் சம்மேளன சிவாச்சார்ய பீடாதிபதியும் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் மங்கள விளக்கேற்றுவதையும் படத்தில் காணலாம். மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன், பருத்தித்துறை [illegible] வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் ஆகியோர் உட்பட விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வெங்காயச் செய்கையில் இலைச் சுருட்டல், குமிழ் அழுகல் நோய்

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது வெங்காயப் பயிர்ச் செய்கையில் இலைச் சுருட்டலும் குமிழ் அழுகல் நோயும் அவதானிக்கப்பட்டுள்ளன. 2004/2005 பெரும் போகத்தில் இந்நோயானது அதிகளவு சேதத்தை ஏற்படுத்தியது.

பொதுவாக ஒரு தோட்டத்தில் 5% வரை இலைச் சுருட்டல் நோயும் 10% வரை குமிழ் அழுகல் நோயும் அவதானிக்க கூடியதாக இருக்கும். தற்பொழுது இங்கு காணப்படும் கூடிய ஈரலிப்பு இந் நோய் ஏற்படுத்துவதற்குப் பிரதான காரணியாக உள்ளது. இந்நோயானது நடுகை பண்ணப்படும் விதை வெங்காயம் மூலமாகவோ அல்லது வயலில் உள்ள நுண்ணங்கிகள் மூலமாகவோ ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே நாம் வினைத்திறனான ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறை களைப் பாவிப்பதால் மட்டுமே இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

இலைச் சுருட்டல் நோய், பங்கசினாலும், விலாங்குப் புழுவினாலும் ஏற்படு கின்றது. விலாங்குப் புழுவின் தாக்கத்தினால் அழுகல் நோய் ஏற்படுத்தும் பங்கஸ் இலகுவாக வெங்காயத்தினுள்புக முடிகின்றது.எனவே பங்கசுவையும் விலாங்குப் புழுவையும் கட்டுப்படுத்தல் அவசியமாகின்றது.

விலாங்குப் புழுவினால் ஏற்படும் இலைச் சுருட்டலில் இலைச் சுருளல் கூடுதலாகவும், பங்கசுவினால் ஏற்படும் இலைச் சுருட்டலில் இலை மஞ்சள் நிறமாகி ஊதா நிறமான புள்ளிகள் - இலைகளில் காணப்படும்.

நோய்க்கான அறிகுறிகள்

*1. இலைச் சுருட்டல்:-*

இலை சுருட்டல் நோயானது குமிழ்



நாட்டி பெரும்பாலும் ஒரு மாதத்தின் பின்னர் அறிகுறிகள் காணக்கூடியதாக இருக்கும். ஆரம்பத்தில் புதிதாகத் தோன்றும் தாழ்கள் நலிவடைந்து மெலிந்து தட்டையான தோற்றத்துடன் வளைந்து காணப்படும். இந்த இலைகள் ஒரு தோல் தன்மையுடையதாகவும் காணப்படும். இதன் பின்னால் வரும் சகல தாழ்களும் இப்படியான தோற்றத்துடனேயே வெளிவரும். இலைகள் முதிர்வடைய முன்னரே வெளிறி மஞ்சள் நிறமாக மாறி மடியப் பார்க்கும். குமிழ்கள் திரளாமல் நலிவடைந்து கோழிக்கால் வெங்காயம் போல் தோற்றமளிக்கும். வெகு விரைவில் வெண்காயம் முதிரமுன் தாவரம் இறக்கும். நாள்சென்ற அல்லது 45-50 நாள்களின் பின் இந் நோய் தோன்றினால் வெண்காயம் திரண்டிருக்கும். மற்றைய நோய் அறிகுறிகளுடன் குமிழ் அழுகல் நோயும் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் வெங்காய அறுவடையைக் குறிப்பிட்ட நாள்களின் முன் அறுவடை செய்ய வேண்டியேற்படும்.

நோய்க் காரணி

இந் நோயானது கொலற்றோறிகம் (Col letotrichum sp) என்னும் ஒரு பங்கசினாலும் விலங்குப் புழுவின் தாக்கத்தினாலும் ஏற்படுகின்றது. இரண்டினதும் நோய் அறிகுறிகளும் ஒரே மாதிரியாய் தோன்றினாலும் நுணுக்குக் காட்டி மூலம் நோய்க் காரணிகளைப் பகுத்தறியலாம்.

இலை வெங்காயம் செய்கை பண்ணப்படும் எல்லாப் பாகங்களிலும் காணக் கூடியதாக உள்ளது. பொதுவாக ஈரலிப்புக் கூடிய அதிக நைதரசன் பாவனை உள்ள தோட்டங்களிலும் இப்பங்கசுவின் தாக்கம் அதிகமாக இருக்கும்.'

நோய்க் கட்டுப்பாட்டு முறைகள்

*1.நோய் அற்ற நடுகை விதை வெங்காயம்*

விதை வெங்காயத்தில் அழுகல் அற்ற நல்ல குமிழ்களை நாட்டவும், விதை வெங்காயம் அழுகல் அற்ற தோட்டத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

தோட்டத்தை நன்றாக-தினசரி அவதானித்து வெங்காயத்தாள்கள் மஞ்சளாவதை அவதானித்தால் சிபாரிசு செய்யப்பட்ட

**செல்வி பா.பாலசிங்கம்**
விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்
விவசாய ஆராய்ச்சி நிலையம்,
திருநெல்வேலி.

பங்கசு நாசினியை விசிற வேண்டும். நோயுள்ள பாத்தியில் இருந்து நோய் அற்ற பாத்திக்கு நீர் பாய்ச்சுவதைத் தவிர்க்க வேண்டும்.

நோய் உள்ள குமிழ்களைப் பிடிங்கி அழிக்கவும்.

இரசாயன முறை

*1. விதைப் பரிகரணம்:-*

70 கிலா கோமாய்(Homai-Thiophonate morhyl 50% WP+Thiram 30%WP) 50 லீற்றர் நீரில் கரைத்து 30 நிமிடங்கள் ஊற விட்டு நிழலில் உலர்த்தி நட வேண்டும்.

2.70 லீற்றர் கோமாய் 50 லீற்றர் நீரில் கரைத்து 10 சதுர மீற்றர் பரப்பிற்கு- மண்ணில் பயி ருக்கு நன்றாகப் படும்படி ஊற்ற வேண் டும்.

3.பயிருக்கு ரெப்சின்(Thiophonate morhyi 70% WP) 5.5 கி/10 லீற்றர் நீரில் கரைத்து பயிருக்கு நன்றாகப்படும்படி விசிற வேண்டும். தாக்கம் கூடுதலாக இருந்தால் 10 நாள்களுக்குப் பின்பு திரும்பவும் விசிற வேண்டும்.

4.விலாங்குப் புழுவினால் பாதிக்கப் பட்ட பயிராயின் 20 கி.கி பியுராடான் ஒரு ஹெக்ரேயருக்கு இடவேண்டும்.

******

# காலத்தின் தேவையறிந்து பசுமைப் புரட்சிக்கு வித்திடும் நிழல் நிறுவனத்தின் சமூகப்பணி

*''மரத்தை வளர்ப்போம் மானுடம் காப்போம்''* என்ற மகுட வாசகத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு உருவாக்கப் பட்டதே 'நிழல்' நிறுவனமாகும். 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பிக் கப்பட்ட இந் நிறுவனம் மானிப்பாயில் தனது தலைமை அலுவலகத்தையும் இணுவிலில் மரக்கன்று வளர்ப்பிற்கான பண்ணையையும் கொண்டு இயங்கிவருகின்றது. இது காட்டு மரங்களையும் பயன் தரு மரங்களையும் வளர்த்து இலவசமாகப் பொது நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் வழங்குவதனூடே யாழ்.மாவட்டத்தில் மரங்கள் நடு

## இயற்கை உணவளிக்க மரம் நடுகைத் திட்டம்

கையை ஊக்குவிக்கும் நோக்குடன் இயங்கி வருகின்றது.

நிழல் நிறுவனம் ஏற்கனவே ஒரு வருட காலத்தில் வளர்க்கப்பட்ட மரக்கன்றுகளைப் பாடசாலைகளுக்கும் கோவில்களுக்கும் பகிர்ந்தளிக்கத் தொடங்கியுள்ளது. இதுவரை அறுபதுக்கும் கிட்டிய பாடசாலைகளுக்கும் 20 க்கும் கிட்டிய கோவில்களுக்கும் இந்நிறுவனத்தால் மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. முதலில் சம்பிரதாய பூர்வமான மரக்கன்று கையளிப்பு அராலி இந்துக் கல்லூரியில் மேற்கொள்ளப் பட்டதுடன் அப்பகுதியிலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் அக் கல்லூரியில் வைத்தே மரக் கன்றுகள் கையளிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் அவர்களது எழுத்து மூலக் கோரிக்கையின் பேரில் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சூழல் பாதுகாப்பும் மர நடுகையும்

சூழல் பாதுகாப்புடன் மரநடுகை நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது யாவரும் அறிந்ததாகும். இதன் காரணமாகவே லயன்ஸ் கழகம், றோட்டறிக் கழகம் போன்ற சமூக சேவை நிறு வனங்களும் மீள் மரநடுகையை முன்னெடுத்து வருகின்றன.

இதன் அடிப்படையிலேயே யாழ்பாணம் றோட்டரிக் கழகத்திற்கு ஏற்கனவே நிழல் நிறுவனமானது இலவசமாக மரங்களை வழங்கி பொதுமக்களூடாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மரநடுகையை ஊக்குவிக்கவும் வகை செய்துள்ளது. செப்ரெம்பர் மாதம் மரங்கள் நடுகைக்கான மாதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மரங்கள் கோடை காலத்தில் நிழல் தரும் அதேநேரம் அவற்றினால் உதிர்க் கப்படும் இலைகள் எமக்கு இயற்கைப் பசளையாகின்றது. மரங்கள் நாம் உண்பதற்கான பழங்களையும் சமைப்பதற்கான காய்கறிகளையும் தருகின்றன. இயற்கை உணவுகள் மக்களின் உடல் ஆரேக்கியத்திற்கு உதவுவது மட்டுமன்றி மக்களின் தேவைகளில் பெரும் பங்கை நிவர்த்தி செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்.மாவட்ட மக்களின் விறகுத் தேவைகளின் பெரும்பங்கு முன்னர் காட்டு மரங்களின் நிரம்பல் ஊடாக பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால் தெருக்கள் மூடப் பட்டமையைத் தொடர்ந்து காட்டு மரங்கள் எடுத்து வரப்பட முடியாது போனதுடன் சமையல் எரிவாயுவின் வருகை [illegible] காரணமாக [illegible] விறகினை உள்ளூரில் தேடிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாகப் பெருமளவு மரங்களை வெட்டி விறகுக்காகப் பாவிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது மர அழிப்பிற்கு பிரதான காரணமாகிவிட்டதால் தறிக்கப்பட்ட மரங்களிற்கு பதிலாக புதிய மரங்களை நாட்ட வேண்டுமென குடாநாட்டு மக்கள் வலியுறுத்தப்பட்டு வருகின்றனர். அத்தகைய நிலையைச் சமாளிக்க நிழல் நிறுவனம் பிரதேச செயலகங்கள் ஊடாக மரக் கன்றுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக சண்டிலிப்பாய் பிர

**க.தேவராசா**
தலைவர்,
நிழல் நிறுவனம்
முகாமைத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்.

தேச செயலகத்திற்கு நிழல் நிறுவனத்தினால் மரக்கன்றுகள் வழங்கப் பட்டுள்ளன. இதனை ஏனைய பிரதேச செயலகங்களுக்கும் மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம். இந்நிலை பொது மக்களூடான மரக்கன்றுகளை நாட்டுகின்ற செயற்பாடுகள் இடம் பெறப் பெரிதும் உதவும். இது பொது மக்களுக்கான எதிர்கால விறகுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையாக இனம் காணப்பட்டுள்ளது.

சேவை அடிப்படையில் தொண்டர்களாக.......

நிழல் நிறுவனத்திற்கான நிதியீட்டம் இதுவரை அங்கத்தவர்களால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. எமது உறுப் பினர்களில் செயலாளர், உபதலைவர் [illegible]ருமே சேவை அடிப்ப[illegible] தொண்டர்களாக இணைந்து மரக் கன்றுகளின் உற்பத்திக்கு தன்னிச் சையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். ''சேவை செய்வதே ஆனந்தம்''.

எமது நிறுவனத்திடமிருந்து மரக் கன்றுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு தமது மரக் கன்றுக் கான கோரிக்கைகளை எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். இக் கோரிக்கைக் கடிதங்கள் மாதாந்தக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே மரக் கன்றுகள் வழங்கும் முடிவு கூட்டத்தில் எடுக்கப்படும். எம்மிடம் மரங்களை விநியோகிக்க வாகன வசதி இன்மையால் இயலுமானவரை மரங்களை பெறுவோர் எம்மிடம் இருந்து மரங்களை சேகரித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். சிறுதொகையாக இருப் பின் செயலாளர் தனது மோட்டர் சைக் கிள் மூலமாக அவற்றைக் கொண்டு சென்று ஒப்படைத்து வருகின்றார். நீங்கள் மரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் போது பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண் டால் போதுமானதாகும்.

**க.தேவராஜா தலைவர்/நிழல் நிறுவ னம், கோண்டாவில் மேற்கு, கோண் டாவில்.**

**சி.சோமசுந்தரம் செயலாளர்/ நிழல் நிறுவனம், முத்துத்தம்பி ஒழுங்கை, மானிப்பாய்.**

மேற்கூறிய முகவரிகளுடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ தொடர்பு கொண்டால் மரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். பொது மக்களும் பொது நிறுவனங்களும் எமக்கு வழங்கும் ஆதரவே நிழல் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அதனூடான சேவைக்கும் வகை செய்யும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் உதவியுடன்

# பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம்

## 30 கோடி ரூபா செலவில் திட்டம்

வடமராட்சி,டிசெ.30

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரப்பகுதிகளுக்கு நீண்டகாலத் தேவையாக இருந்துவரும் குழாய் மூல குடிதண்ணீர் விநியோகத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுமார் 30 கோடி ரூபா செலவில் இத்திட்டத்தை கட்டம் கட்டமாக மேற்கொள்ள முன்வந்துள்ளதாகப் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

வல்லிபுரம், மணற்காட்டுப் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிதண்ணீர் பெறப்பட்டு குழாய்மூலம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரப்பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரப்பகுதிகளில் பாரிய தண்ணீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலமே நகர மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இத்திட்டம் கட்டம் கட்டமாக அமுல் படுத்தப்படும். முதற்கட்டமாகப் பருத்தித்துறை நகரத்திற்கான குடிதண்ணீர் விநியோகத்திட்டம் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் இக்குடிதண்ணீர் விநியோகத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வல்லிபுரம், மணற்காட்டுப்பகுதிகளில் குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு நகரப் பகுதிகளில் குழாய்களும் புதைக்கப்பட்டுக்கொண்டிருந்த இந்நிலையில் சுமுகமற்ற சூழ்நிலை காரணமாக இத்திட்டம் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-236)

# ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று விசேட அபிஷேகம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் முதற்கட்ட திருப்பணி வேலைகளை அடுத்து இன்று செவ்வாய்க்கிழமை சிவன், ஐயனார், அம்பாள் ஆகிய மூல மூர்த்திகளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற உள்ளன.

ஈழத்துச் சிதம்புரத்தில் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழுதடைந்த சுற்று மண்டபங்கள் புனரமைக்கப்பட்டு உட்பிரகாரச் சுவர்களில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக்கலைஞர்களினால் நடராஜப் பெருமானின் 108 தாண்டவங்கள் மற்றும் சிற்ப வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுற்று மண்டப வேலைகளோடு அம்பாள், ஐயனார் மொட்டைக் கோபுரங்கள் வெள்ளைக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று முதலாம் திகதி வியாழக்கிழமை திருவெம்பாவை பெருந்திருவிழா ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளன. (202-250)

## யாழ்.ப.நோ.கூ.சங்கம்

# புதுவருடப் பண்டிகையை முன்னிட்டு விமானம் மூலம் பொருள்கள் தருவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

புதுவருடப்பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விமானம் மூலம் ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தருவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

பால்மா வகைகள் மற்றும் கேக் தயாரிப்புப் பொருள்கள், மாசி, கருவாடு மற்றும் சில அத்தியாவசியப் பொருள்களைக் கொழும்பில் இருந்து விமானம் மூலம் சங்கம் தருவித்துள்ளது.

இந்தப் பொருள்கள் சங்கத்தின் கூட்டுறவுநகர் விற்பனை நிலையங்களில் மட்டும் வைத்துப் பாவனையாளர்களுக்கு நியாய விலையில் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் யாழ்.நகர வர்த்தக நிலையங்களில் கேக் தயாரிப்புப் பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதோடு அவற்றின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-224)

# யாழ்.நகரில் சைக்கிள் திருட்டு நாளுக்கு நாள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.நகரில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, முனீஸ்வரன் வீதி போன்றவற்றில் சிலர் வீதியோரங்களில் தமது சைக்கிளைப் பூட்டிவிட்டு வர்த்தக நிலையங்களுக்குப் பொருள்களை வாங்கச் செல்கின்றனர். அச்சமயம் பார்த்து சில திருட்டுக் கோஷ்டி பூட்டி நிற்கும் சைக்கிள்களை தந்திரமாகக் களவாடிச் செல்கின்றனர்.

கடந்த வாரத்தில் சிலர் இவ்வாறு தமது சைக்கிளைப் பறிகொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது புதுவருடத் தினத்திற்கு நகரில் சன நெரிசல் அதிகரித்துக் காணப்படும் சமயத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டலாம் என்ற முன்னேற்பாட்டில் மக்கள் தமது சைக்கிள்களைப் பாதுகாப்பான இடங்களில் வைத்துவிட்டுச் செல்வதே சிறந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. (202-224)

# கொழும்புத்துறை மேற்கில் உள்ள மதகைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.30

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்கு இரு மருங்கிலும் உள்ள மதகை மீளப் புனரமைத்துத் தருமாறு மேற்படி ஆலய நிர்வாகம் யாழ்.மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆலயத்திற்கென பல லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் சித்திரத்தேர் விரைவில் வீதி வலம் வர இருக்கின்றது. இந்நிலையில் ஆலய வீதியின் இரு மருங்கிலும் இருக்கும் மதகு போதிய வசதியின்மையுடன் காணப்படுகின்றது.

ஆகையால் இந்தப் புதிய தேர் வீதி வலம் வருவதற்கு முன்னர் மேற்படி மதகை மீளப் புனரமைத்துச் சீர்செய்து தருமாறு ஆலய நிர்வாகத்தினர் மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சித்திரத்தேர் எதிர்வரும் தைப்பூச தினத்தன்று வெள்ளோட்டத்திற்கு விடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (202-224)




# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

நல்லூர்,டிசெ.30

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறவுள்ள வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் 7 ஆம் திகதி எனவும் மறுநாள் 8 ஆம் திகதி வியாழக்கிழமை அணி ஒழுங்குகள் தெரிவு இடம்பெறும் என்றும் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

*துடுப்பாட்டம்* - ஆண், பெண், *வலைப்பந்தாட்டம்* - பெண், *கரப்பந்தாட்டம்*- ஆண், பெண், *உதைபந்தாட்டம்* - ஆண், பெண், *கபடி*- ஆண், பெண், *எல்லே* - ஆண், பெண், *மெய்வல்லுநர்*- ஆண், பெண் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எக்காரணம் கொண்டும் ஆள் மாறாட்டங்கள் நிகழ்வதையோ போட்டிவிதிகளுக்கு முரணாகச் செயற்பட அனுமதிக்கப் படமாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளன.

ஏனைய போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர் அல்லது வீராங்கனைகள் மெய்வல்லுநர் போட்டியில் கலந்துகொள்வது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

மாவட்ட மட்டப்போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் அனைத்து விளையாட்டுக் கழகங்களிலும் இருந்தே தேர்ந்தெடுக்கப்படுவர் என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றபோது நல்லூர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். விளையாட்டுக் கழகங்களின் யாப்பு விதிகள் தொடர்பாக பிரதேச விளையாட்டு அதிகாரி எஸ்.சுதாகர் விளக்கமளித்தார். (203-111)

## கராத்தே விளையாட்டுக் கழகங்களைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் உள்ள கராத்தே விளையாட்டுக் கழகங்களை யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (203)

# தையல், மனையியல் பயிற்சிகள்

நல்லூர்,டிசெ.30

கிராம அபிவிருத்தித் திணைக்களம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக தையல், மனையியல் பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது.

சாவகச்சேரி, பருத்தித்துறை, மருதங்கேணி, தெல்லிப்பளை, வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கான பயிற்சிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமையும்-

யாழ்ப்பாணம், நாவாந்துறை தெற்கு, உடுவில், சண்டிலிப்பாய் பகுதிகளுக்கான பயிற்சிநெறிகள் மறுநாள் வெள்ளிக்கிழமையும்-

மாவட்ட மட்ட தொழிற்றிறன் டிப்ளோமா பயிற்சி நெறிகள் யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி சமுர்த்தி வங்கிக் கருகாமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் நடைபெறும் என யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி தெரிவித்தார். (202-111)

# கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.30

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய ஆசிரியர்களை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குக் கலந்துரையாடலுக்காகப் பாடசாலைக்குச் சமுகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (202)

# நல்லூர் பிரதேச சபையின் நடமாடும் சேவை


நல்லூர்,டிசெ.30

நல்லூர் பிரதேச சபையின் நடமாடும் சேவை நேற்று திங்கட்கிழமை கல்வியங்காடு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் சனசமூக நிலையத்தில் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எம்.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டு ஆதனவரி உட்பட தமது பிரச்சினைகள் குறித்து செயலாளருடன் கலந்துரையாடினர்.

பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளையும் செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர்.

சுத்தமான குடிதண்ணீரைப் பெறக்கூடியதாகக் குளோரீன் குளிகைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. மருத்துவ சேவைகளும் இடம்பெற்றன. (202-111)



உடுவில் கல்விக் கோட்டம் 'யுனிசெப்' நிறுவன ஆதரவுடன் நடத்திய கல்வித்தின நிகழ்வுகள் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் உடுவில் கல்விக்கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.குபேரநாதன் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். பிரதம விருந்தின[illegible] கல்வி பட்டப் படிப்புகள் பீடாதிபதி எஸ்.சத்தியசீலன் மாணவர் ஒருவனுக்குப் பதக்கம் [illegible] உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். *(படங்கள்: நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்தை தவறாக அணுகும் பிரமுகர்கள்

சர்வதேச வர்த்தகச் சந்தையில் விலைமட்டங்கள் கீழிறங்கும் சந்தர்ப்பங்களில் எரிபொருள்களின் விலைமட்டங்களைக் குறைத்துவிட இயலாத விதத்தில் இரு வெளிநாட்டுத் தனியார் வங்கிகளுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 'ஹெட்ஜிங்' ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. ஒரே பார்வையில் அந்த ஒப்பந்தத்தை நோக்கிய இலங்கையின் உயர்நீதிமன்றம் அதை ஊழல்கள் நிறைந்த சீர்கெட்டதொரு ஒப்பந்தமெனச் சுட்டிக்காட்டி அதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவரான அசந்த டி மெல் அப்பதவியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்படும் விதமாகவும், கனியவள அபிவிருத்தி அமைச்சரான ஏ.எச்.எம்.பௌசி வசத்தில் உள்ள அமைச்சின் பொறுப்பு ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் கட்டளை பிறப்பித்துள்ளது.

மேற்படி 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னின்ற இவ்விருவருமே உயர் நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்புக்கு உள்ளாகியுள்ளனர். மேற்படி ஒப்பந்தம் மேற்கொள்ள அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றிருந்ததாகவும், மத்திய வங்கி ஆளுனரான அஜித் நிவாட் கப்ராலின் திட்டத்துக்கு அமைவாகவே எவ்வித தாமதமுமின்றி மேற்படி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் கனியவள அபிவிருத்தி அமைச்சரான ஏ.எச்.எம்.பௌசி நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அது எவ்வாறான போதிலும், அவ்விடயம் தொடபாகத் தற்போது நாட்டு மக்களால் அவர்கள்மீது குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கோட்டே பிரதேச பௌத்த தேரர்கள் சபையின் இணைத் தலைவரான கலாநிதி இத்தபானே தம்மாலங்கார தேரர் கீழ்க்கண்டவாறு கருத்து வெளிப்படுத்தியுள்ளார்.

தொடர்ச்சியாகவே இந்நாட்டில் ஊழல்களும், மோசடிகளும் இடம்பெற்றே வருகின்றன. இத்தகைய சீர்கேடுகள் காரணமாகவே நாட்டின் தேசிய நிதிவளம் பாரதூரமான வகையில் அழிந்துபோகிறது. இத்தகைய பாதிப்புகளுக்கு எதிராக நீதிமன்றம் மூலமான தீர்வுகளைப் பெறமுடிந்துள்ளமையானது அனைவராலும் வரவேற்கப்படுமொரு நிலைப்பாடாகியிருப்பதையும் காணமுடிகிறது. இத்தகைய சீர்கேடுகளுக்கு எதிராக நீதிமன்றம் அனுசரணை கிட்டாதவிடத்து, அவற்றுக்கு எதிராக வேறு எந்தவிதத்திலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென் பதை எதிர்பார்க்க இயலாது. இவை தொடர்பாக நாடாளுமன்ற வாதவிவாதங்களுக்கு இன்றுவரையில் பலன் கிட்டியதில்லை.

இன்று, ஆபத்பாந்தவனாகக் கைகொடுத்து உதவும் ஒரே நிறுவனம் நீதிமன்றமேயாகும். பாரபட்சமற்ற, அரசியல் வேற்றுமையற்ற, நியாயமான தீர்ப்பு அதன்மூலம் கிட்டுவது பெரும் சிறப்புரிமையாகும். இந்த விவகாரம் தவிர்ந்த வேறு எண்ணற்ற ஊழல்களும் மோசடிகளும் இந்நாட்டில் மலிந்து போயுள்ளன. அத்தகைய விவகாரங்களும் நீதிமன்றம் முன் கொண்டுவரப்பட வேண்டும் என நான் கருதுகிறேன்.

அரசியல் பலத்தைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு பெருமளவு தரப்பினால் எந்தவொரு சீர்கேட்டையும் தைரியமாக மேற்கொள்ள முடிகிறது. அரசியல் என்பது சிறப்பியல்புமிக்கதொரு கருவியேயாகும். என்றாலும் அரசியல் பலம் கிட்டியுள்ளதால் பெருமளவு தரப்புகள் இன்று இத்தகைய கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றினூடாகப் பெருமளவு தேசிய நிதியை அவர்கள் கபளீகரம் செய்து வருகின்றனர். ஆனால் இக்குற்றங்களுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டதாகத் தென்படவில்லை. நாலாயிரம் கோடி ரூபா பெறுமதியான மேற்படி எண்ணெய் ஒப்பந்தக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகத் தீர்மானம் மேற்கொண்ட தரப்பு அமைச்சரவையா? சந்பந்தப்பட்ட அமைச்சரா? அவ்வாறின்றேல் வேறு தரப்பொன்றா? மத்திய வங்கியின் ஆளுனரா - என்பதே இந்த விவகாரம் தொடர்பான இன்றுள்ள சிக்கலான பிரச்சினையாகும்.

நுகேகொட நாலந்தாராம விகாராதிபதியான தினியாவல பாலித்ததேரர் மேற்படி விவகாரம் தொடர்பாகக் கருத்து வழங்குகையில்:-

இது, நாலாயிரம் கோடி ரூபாவைக் கபளீகரம் செய்யும் பாரதூரமானதொரு மோசடியேயாகும். இந்த நிதி மோசடிக்குப் அசந்த டி மெல்லும் அமைச்சரென்ற ரீதியில் அமைச்சர் பௌசியும் பொறுப்பேற்றுப் பதிலளிக்க வேண்டியுள்ளது. இந்த மோசடி மேற்கொள்ளப்படுவது தொடர்பாகத் தமக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிரமுகர்களை அவர்கள் பகிரங்கப்படுத்த வேண்டியுள்ளது. எவ்வாறோ, அத்தரப்பினரின் அனுசரணை மற்றும் வழிகாட்டல் ஊடாகவே இந்த மோசடி ஒப்பந்தம் இடம்பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமைப்பதற்கான செலவினம் கூட 36 கோடி ரூபா மட்டு மேயாகும். ஆனால் மேற்படி கொடுக் கல்வாங்கல் விவகாரமோ 40 கோடி ரூபா பெறுமதியானதாகும். கடந்த முப்பது ஆண்டுகளாக விடுதலைப்புலிகள் அமைப்பினால் நாட்டுக்கு ஏற்படுத் தப்பட்ட இழப்புகளைக் கணக்கிடும் போது, மேற்படி ஒப்பந்த நடைமுறை மூலமாக அரசுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள இழப்பு அதைவிட அதிகமானதாகும். தனிப்பட்ட ரீதியில் எந்தவொரு தரப்பினர் மீதோ அல்லது நபரொருவர் மீதோ சேறுபூசும் அல்லது பழிவாங்கும் நோக்குடனல்லாது நாட்டின் குடிமகனொருவர் என்ற ரீதியில், நாட்டு மக்களுக்குக் கிட்டும் நல்வாய்ப்புகள் கிட்டாத பட்சத்தில், எதிர்க்கட்சி கூட இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளாததொரு நிலையில் நாடாளுமன்றத்திலும் கூட அது தொடர்பான உரிய நடவடிக்கை மேற்கொள்ள எத்தனிக்கப்படாததொரு நிலையில்தான் - நாம் எமது உரிமைகள் தொடர்பாக கவனத்திற்கொண்டு மேற்படி விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தின் தயவை நாடவேண்டி நேர்ந்தது.

இதேபோன்று அரச நிறுவனங்கள் பலவற்றிலும் பாரதூரமான ஊழல்களும் மோசடிகளும் இடம்பெற்றுள்ள தகவல்கள் எமக்குக் கிட்டியுள்ளன. அவற்றை நோக்கும்போது, புதிய வரவு - செலவுத் திட்டமொன்று முன்வைக்கப்படுவது அவசியமற்றதே. நடைமுறையில்உள்ள வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்யவதன் மூலம் எவ்வளவுக்காவது நிதிவளத்தைச் சேமித்துக்கொள்ள வாய்ப்பமைந்திருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

சுருக்கமாகக் கூறுவதானால், அரசியல் அதிகார ஆசையே இவற்றுக்கான அடிப்படைக் காரணியாகும். அதாவது, அதிகாரத் தரப்புகள் தம்மைச் சார்ந்தோரின் கரங்களை வலுப்படுத்துவது மற்றும் அதிகாரபலத்தை மேம்படுத்திக்கொள்வதே அரசியலின் நோக்காகியுள்ளது. அமைச்சர்கள் என்ற அதிகாரபலம் கிட்டியதும் தான்தோன்றித்தனமாக எவ்வாறும் செயற்படலாமென்பதே அரசியல்வாதிகளின் அபிலாஷை என்பது தெளிவாகத் தெரிகிறது. உதாரணமாக மின் கட்டணங்களைக் குறைக்க இயலாதென்ற ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சர்களின் கூற்றையும், புறமொதுக்கிவிடும் அமைச்சர்களின் கூற்றையும் புறந்தள்ளி விடும் விதமாக மின் கட்டண அறவீடுகள் குறைக்கப்பட்ட சாதக நிலையை இங்கு சுட்டிக்காட்ட முடியும். அந்தவகையில் சாத்தியமற்றதென்ற நடைமுறையும் சாத்தியப்படுத்தப்பட்டதன் காரணமாக நாட்டுமக்கள் இந்த விவகாரங்கள் தொடர்பாக விழிப்புடனேயே உள்ளனர் என்பது அரசியல்வாதிகளுக்குப் புரிந்துள்ளது என்றே கொள்ள முடிகிறது - எனக் கருத்து வெளிப்படுத்தியுள்ளார்.

வழக்கறிஞரான சிரால் லக்திலக்க கருத்து வெளிப்பாடுத்துகையில்,

அரசே ஒரு 'ஹெட்ஜிங்' சூதாட்டக்களமாகும். அங்கு யுத்தம் ஒரு சூதாட்டமாகும். தனது ஏனைய செயற்பாடுகளிலும் அது சூதாட்டமே ஆடுகிறது. அந்தவகையில் அரசின் நிர்வாகமே சூதாட்டத்தின் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. ஹெட்ஜிங் விவகாரம உள்ளிட்ட ஏனைய சூதாட்டங்களில் சம்பந்தப்பட்டிருப்போர் அசந்த டி மெல் மற்றும் அமைச்சர் பௌசி மட்டுமல்ல ஒட்டுமொத்த அரச அதிகாரத் தரப்புக்களேயாவர். தமது அரசியல் சூதாட்டத்தின் மூலம் இவர்கள், நாட்டுப் பற்று, யுத்தம், கிளிநொச்சி வெற்றி என்பவற்றால் மக்களை மதியிழக்கச் செய்து- மயக்கி, அவர்களது கண்களில் மண்ணைத் தூவி நாட்டைச் சூறையாடி வருகின்றனர்.

மேலும், பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்றுவரும் பாரதூரமான ஊழல் மோசடிகள் தற்போது வெளிச்சத்துக்கு வந்தவண்ணமுள்ளன. இவை தொடர்பான சூத்திரதாரியும் அசந்த டி மெல்லேயாவார். மேற்படி 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அந்தவகையில் அமைச்சரவையின் தலைவரான நிறைவேற்று அதிகாரியே இதற்குப் பொறுப்புடையவராக இருப்பது தெளிவாகப் புலப்படுகிறது. எவ்வாறோ, நாட்டின் தேசிய நிதிவளத்தின் 80 வீதமானவை மேற்படி பிரமுகரின் சட்டைப் பைகளுக்குள்ளேயே செல்கிறது.

மறுபுறத்தில், எமது நாட்டின் தேசிய வருவாய் 75 ஆயிரம் கோடி ரூபாவாகும். அதில் 60 ஆயிரம் ரூபா இலங்கை பெற்றுள்ள கடன் தவணைக் கட்டணங்களுக்காக ஒதுக்கப்படுகிறது. எஞ்சியிருக்கும் 15 ஆயிரம் கோடி ரூபாவே நாட்டு மக்களைப் பராமரிக்கவும், வீதிப்புனரமைப்புகளுக்கும், கல்விச் செயற்பாடுகளுக்கும், செலவழிக்கப்படவேண்டியுள்ளது.

எனவே, இன்று நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் கணக்கிலெடுக்கப் படவேண்டியவைக ளல்ல என யாரும் கருதுவார்களேயா னால், அது தவறானதாகும். இது, பாரதூரமானதொரு உயிர்க்கொல்லி நோயாகும். இத்தகையதொரு நோய், சிங்கப்பூர், சீனா போன்ற உலக நாடுகளிலும் காணப்பட்டது. ஆனாலும், அந்த நாடுகளில் வாழ்ந்த தூரநோக்குச் சிந்தனைகொண்ட தரப்புகளால் அத்தகைய சீர்கேடுகள் சட்டத்தின்முன் கொண்டுசெல்லப்பட்டு மிகக் கடுமையாக அடக்கியொடுக்கப்பட்டன. ஆனால், எமது நாட்டின் நிலைப்பாடு ஜீரணித்துக்கொள்ள இயலாத அளவுக்கு மாற்றமடைந்துள்ளது. அத்தகைய சீர்கேடுகள், அத்துமீறல்களுக்கு எதிராகச் செயற்படக்கூடிய அனைத்துச் சட்டங்களும் விதிகளும் நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராகச் செயற்படக்கூடிய அனைத்து நிறுவனங்களும் செயலற்றுப் போயுள்ளன. இவற்றுக்கு எதிராகச் செயற்படக்கூடிய அனைத்து உத்தியோகத்தர்களும் மௌனிக்கச் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அரசு மற்றும் அதன் தலைமைத்துவம் இல்லாதொழிக்கப்படும் வரை கேடுகளிலிருந்து விடுபடும் வாய்ப்பு இந்நாட்டுக்கு கிட்டமாட்டாது. மறுபுறத்தில் அரச தலைமை யுத்தத்தை மிகச் சரியாகவே நடத்திச் செல்வதால், அவர்களுக்கு நாம் சற்று அவகாசம் வழங்க வேண்டியுள்ளது - என்றதொரு வாதம் முன்வைக்கப்படுவதையும் செவிமடுக்க முடிகிறது. ஆனாலும் கடந்த மூன்றாண்டுகாலமாக அந்த அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அக்காலகட்டத்துள் அதை நிறைவேற்றிமுடிப்பதற்கான வாய்ப்புகளும் கூட தாராளமாகவே வழங்கப்பட்டிருந்தன. அது எவ்வாறான போதிலும் நாட்டின் திறைசேரி சூறையாடப்படுவதற்கு எவ்விதத்திலும் அனுமதிக்க இயலாது என்பதையும் அவர் தெளிவுபடுத்தி நிற்கிறார்.

நாட்டின் தேசிய நிதி சம்பந்தப்பட்ட ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படும் போது, அது தொடர்பாகக் கவனமெடுத்து ஆய்வொன்றை மேற்கொள்ளும் பொறுப்பும் கடப்பாடும் மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சுக்குரியதாகும். அந்தவகையில், மேற்படி 'ஹெட்ஜிங்' நடைமுறை தொடர்பான ஆய்வுகளில் தலையிட்டுச் செயற்பட்டுள்ளவர் மத்தியவங்கியின் ஆளுநரான அஜித் நிவாட் கப்ராலேயாவார். 'ஹெட்ஜிங்' நடைமுறையைப் பரிந்துரை செய்யும் மற்றும் அது தொடர்பாக ஆலோசனை வழங்கும் மட்டத்திலானதே அவரது பதவியாகும். அதற்கமைய, 'ஹெட்ஜிங்' நடைமுறையைப் பரிந்துரைக்கும் எழுத்துமூல ஆவணமொன்றை அவர் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியிருந்தார். எனவே அஜித் நிவாட் கப்ராலே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டியவர் என்பது இங்கு மிகத் தெளிவான விடயமாகும்.

பெருந்தொகையான நாட்டின் தேசிய நிதி வெளிநாட்டு நிறுனங்களுக்குச் சென்றடையுமொரு சம்பந்தர் மூலமான கொடுக்கல்வாங்கல்களின்போது, அசந்த டி மெல் என்ற பிரமுகர் மீதும் அமைச்சர் பௌசி மீதும் பழியைச் சுமத்திவிட்டு, மத்தியவங்கியும், அமைச்சரவையும், நிதியமைச்சின் செயலாளரும் தப்பித்துக் கொள்ள இயலாது. விசேடமாக இந்த விவகாரம் தொடர்பாக நிதியமைச்சர் [illegible]திருக்க வேண்டியுள்ளது. [illegible] இந்த விவகாரத்தில் இரகசியமான பணப்பரிமாற்றங்கள் எத்தரப்புகளிடையே பரிமாறிக்கொள்ளப்படுகின்றன என்பதும், ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியுள்ளது. அது தொடர்பான தகவல்களை நாம் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை.

மேற்குறித்தவாறு இங்கு தமது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் வடமத்திய மாகாண சபையின் உறுப்பினரான றோஹன கமகே.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க, கருத்து வெளியிடுகையில்,

மேற்படி 'ஹெட்ஜிங்' நடைமுறையை அறிமுகப்படுத்தியவர் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலே எனவும், அதை நடைமுறைப்படுத்தியவரும்கூட அவரே எனவும், தற்போது அது குறித்து பிரச்சினையைக் கிளப்பிவிட்டுள்ளவரும் அவரே எனவும் ஏ.எச்.எம்.பௌசி நாடாளுமன்றத்தின் முன் பகிரங்கப்படுத்தியுள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஒட்டுமொத்த அமைச்சரவையின் அனுமதியும் இதற்குக் கிடைக்கப்பெற்றுள்ளதால், உண்மையில் இதன் அடி, முடி பற்றி உடனடியாக ஆராய்ந்து பார்க்கப்படுவது மிக அவசியமானதாகின்றது எனவும் தெரிவித்துள்ள அவர்,

பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள்கள் குறைந்த விலையில் நாட்டு மக்களுக்கு வழங்கப்படவேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும். இன்று, ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 47 அமெரிக்க டொலர்களாகக் கீழிறங்கியுள்ளதால், எரிபொருள் குறைந்தவிலையில் வழங்கப்படக்கூடிய சாத்தியமிருப்பது மிகத் தெளிவானதாகும். எனவே இவ்விவகாரத்தில் சம்பந்தப்படும் தரப்புகளின் தவறுகளை நாட்டுமக்கள் மீது சுமத்திவிட்டு, யுத்தத்தைக் காரணம் காட்டுவதை ஏற்க இயலாது. சுருக்கமாகக் கூறுவதானால் அனைத்துத் தில்லுமுல்லுகளையும் மூடிமறைக்குமொரு வாய்ப்பான கருவியாகவே யுத்தம் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது என்பதே தெளிவான உண்மையாகுமெனவும் அவர் கருத்து வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவரான வாசுதேவ நாணயக்கார கருத்துக் கூறுகையில்,

அமைச்சர் பௌசியின் தகவல்களுக்கு அமைய மத்திய வங்கியின் ஆளுநர் இதில் சம்பந்தப்பட்டுள்ளார். ஆயினும் இந்த விவகாரம் தொடர்பான அமைச்சரின் இறுதியான கருத்து வெளிப்பாடுகள் மற்றும் தொடர்வுள்ள ஏனையோரின் தகவல்களுக்கும் அமைவாகவே இது குறித்து ஆராய்ந்து பார்க்க முடியும். நீதிமன்றத்தின் கூற்றுக்கு அமைய மத்தியவங்கியின் ஆளுநரும் அமைச்சர் பௌசியுமே இந்த விவகாரத்தின் முக்கிய சூத்திரதாரிகளாகின்றனர். ஆனாலும் அவர்கள் மட்டும் இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் அல்லர். எவ்வாறானபோதிலும் எதிர்காலத்தில் கிட்டவுள்ள இந்த விவகாரம் பற்றிய மத்திய வங்கி ஆளுநர், ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் கருத்து வெளிப்பாடுகளுக்கு அமையவே இது குறித்த தீர்மானமொன்றுக்கு வரவேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட கருத்து வெளிப்பாடுகளோடு, வழக்கறிஞரான ரவி ஜயவர்தனா கருத்து வழங்குகையில், நாட்டில் நிகழும் ஊழல்களும் மோசடிகளும் அரசின் அனுசரணையுடனேயே நிகழ்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்ததாக, தம்மைப் பதவிவிலகுமாறு மக்கள் வலியுறுத்தக்கூடுமென்ற பீதி காரணமாக அமைச்சர்கள் தமது பதவிக் கதிரைகளை இறுகக் கட்டிப்பிடித்துக்கொண்டுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினரான தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். அதேவேளை தமது கருத்தை முன்வைத்துள்ள ஐக்கிய சமதர்ம வாதக்கட்சியின் தலைவரான சிறிதுங்க ஜெயசூரிய வேற்று நாடொன்றில் இத்தகையதோர் சீர்கேடு அரசதரப்பினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த நாட்டின் அரச தரப்பினரே ஒட்டு மொத்தமாக தமது பதவிகளைத் துறந்துவிட்டிருப்பர் என்பதைச் சுட்டிக்காட்டிச் சாடியுள்ளார். ✱

தமிழில்: ராஜா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் ஏற்பட பிரணாப்பை உடனடியாக கொழும்பு அனுப்புக!

## இனி ஒரு நிமிடமும் தாமதிக்கக் கூடாது மத்திய அரசிடம் ராமதாஸ் வலியுறுத்து



சென்னை, டிச. 30

இலங்கையில் தமிழர்கள் ஒவ்வொரு விநாடியும் கொல்லப்படுகிறார்கள். எனவே, இனியும் காலம் தாமதிக்காமல் போரை நிறுத்தும்படி இலங்கை அரசை, இந்திய அரசு கடும் தொனியில் எச்சரிக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு அனுப்பி போரை நிறுத்துகிறேன் என்று பிரதமர் அளித்த வாக்குறுதி, ஏறக்குறைய ஒரு மாத காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. உடனடியாக வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு அனுப்பி வெறும் பேச்சளவில் மட்டுமின்றி சண்டையை நிறுத்தும்படி எச்சரித்து, அதனைச் செயலில் சாதித்து வரவேண்டும். இதுவே இங்குள்ள ஏழரைக் கோடி தமிழ் மக்களின் ஏக்கமாகும் - என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இரண்டு பகை நாடுகளுக்கு இடையே நடைபெறுகின்ற சண்டையில் கூடப் பயன்படுத்தக் கூடாது என்று சர்வதேச சமூகம் தடை செய்துள்ள கொத்துக் குண்டுகளை இலங்கைப் போர்ப்படை விமானங்கள் வீசி, மனித இனத்துக்கு எதிரான பெரும் குற்றத்தை இழைத்திருக்கின்றன.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரால் இலங்கை அரசு, உலகம் இது வரையில் கண்டிராத, மிகப் பெரிய இன அழிப்புப் பயங்கரவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அங்கே செத்து மடிந்து கொண்டிருக்கும் தமிழர்கள் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று இந்தியாவை நோக்கி உரிமையோடு குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சட்டப்பேரவையில் இரண்டு முறை தீர்மானம், பல முறை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம், எல்லாவற்றுக்கும் மேலாக முதல்வர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் டில்லிக்குச் சென்று பிரதமரை சந்தித்து, சண்டையை நிறுத்த நடவடிக்கை எடுங்கள் என்று வலியுறுத்தியிருக்கிறோம். வெளியுறவுத் துறை அமைச்சரை கொழும்புக்கு அனுப்புகிறேன் என்று பிரதமர் அளித்த வாக்குறுதி, ஏறக்குறைய ஒரு மாத காலமாகக் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

பிரதமர் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத அவகாசத்தைப் பயன்படுத்தி, சிங்கள இனவெறி அரசு நாள்தோறும், தமிழர்களை வேகமாகக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது. இதைக் கண்டு தமிழர்கள் எல்லோரும் துடித்துக் கொண்டிருக்கிறோம்.

அந்த வேதனைத் துடிப்பின் எதிரொலிதான், முதல்வர் கருணாநிதியின் கண் கலங்கும் பேச்சு. நாம் விரும்புகின்ற அளவுக்கு, நாம் படுகின்ற வேதனையைத் துடைக்கின்ற அளவுக்கு வேகமாக முடிவெடுக்காமல் இந்தியப் பேரரசு தாமதிக்கின்ற காரணத்தினால் ஒவ்வொரு விநாடியும், ஒரு தமிழனின் பிணம் இலங்கையில் வீழ்ந்து கொண்டிருக்கிறது என்றும், அதைத் தடுத்திட உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டில்லியை நோக்கி முதல்வர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இது தனிப்பட்ட ஒருவரின் வேண்டுகோள் அல்ல, முதல்வர் என்ற அடிப்படையில் ஏழரைக் கோடி தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வேண்டுகோள் இது. இதை இந்திய பேரரசு அலட்சியப்படுத்த கூடாது. அப்படி அலட்சியப்படுத்தினால், இனியும் தாமதப்படுத்தினால் தமிழர்களின் உணர்வுகளை அவர்கள் மதிக்கவில்லை, தமிழர்களை மதிக்கவில்லை, அலட்சியப்படுத்துகிறார்கள் என்றுதான் தமிழர்கள் அனைவரும் கருதுவார்கள்.

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டிய மிகப் பெரிய கடமை, இந்தியப் பேரரசுக்கு இருக்கிறது என்பதை உரிமையோடு வலியுறுத்துகிறோம்.

இதில், தமிழர்கள் எல்லோரும் விரும்புகின்ற அளவுக்கு அவசரம் கூட வேண்டாம். மெதுவாக நடவடிக்கை எடுத்திருந்தாலே இந்நேரம் இலங்கையில் சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கும். அது நடைபெற்றிருந்தால், குறைந்தபட்சம் கடந்த ஒரு மாத காலத்தில் செத்து மடிந்த இலங்கைத் தமிழர்களின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும். இந்தியப் பேரரசு இனியும் காலம்தாழ்த்தாமல், நடவடிக்கை மேற்கொண்டு, இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இனப்படுகொலைக்குக் காரணமான சண்டையை நிறுத்தவேண்டும்.

இதற்கு உடனடியாக வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு அனுப்ப வேண்டும். வெறும் பேச்சளவில் மட்டுமின்றி சண்டையை நிறுத்தும்படி எச்சரிக்க வேண்டும் - என்றார்.

## புலிகளை ஆதரிப்போருடன் காங்கிரஸ் உறவு வைக்காது

### அமைச்சர் நாராயணசாமி


புதுச்சேரி, டிச. 30

விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் இயக்கத்தோடு காங்கிரஸ் உறவு வைத்துக் கொள்ளாது - என்று மத்திய திட்டத்துறை இணையமைச்சர் வி. நாராயணசாமி கூறியுள்ளார்.

காங்கிரஸ் தொடங்கப்பட்டு 124ஆவது ஆண்டுத் தொடக்க விழா புதுச்சேரி காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. அதில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

புதுச்சேரி, தமிழகத்தில் சில கட்சிகள் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை இழிவாகவும், ராஜீவ் படுகொலையை விமர்சனம் செய்தும் பேசி வருகின்றனர். புலிகளை ஆதரிக்கும் இயக்கத்தோடு காங்கிரஸ் உறவு வைத்துக் கொள்ளாது. காங்கிரஸை பொறுத்தவரை இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவு என்றும் உண்டு. இலங்கை தமிழர்களுக்கு ஆதரவு என்ற போர்வையில் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் இயக்கங்களை உளவுத்துறை கண்டறிய வேண்டும் - என்றார்.

## பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு



பிரதீபா பட்டீல் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின் முதல் முறையாக நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவிலில் சுவாமி தரிசனம் செய்ய வந்தார். அங்கு அவரை பூரண கும்ப மரியாதையுடன் மேளதாளத்துடன் வரவேற்று கோவிலுக்குள் அழைத்துச் சென்றனர்.

அங்கு நந்திமண்டபம் அருகே கலசங்களில் வைக்கப்பட்டு இருந்த 22 புனித தீர்த்தங்களை அவர் பெற்று தனது தலையில் தெளித்துக் கொண்டார்.

அதைத்தொடர்ந்து 12 விசேட அபிஷேக பூஜை செய்து பயபக்தியுடன் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் தனது கணவர் மற்றும் உறவினர்களுடன் சுவாமி தரிசனம் செய்தார்.

அதைதொடர்ந்து உலக பிரசித்தி பெற்ற கோவிலில் அமைந்துள்ள ஆயிரத்து 212 தூண்கள் அடங்கிய 690 அடி நீளம் கொண்ட 3ஆம் பிரகாரத்தை பார்த்து வியந்து ரசித்தார். பிறகு கோவில் தங்க ரதத்தை கண்டுகளித்தார்.

பின்னர் கோவில் அம்மன் சன்னதி திருக்கல்யாண மண்டபத்தில் அமர்ந்து, அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் பதிவேடு புத்தகத்தில் ''ஜோதிர்லிங்க ஸ்தலமான ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்பாள் கோவிலுக்கு வந்து தரிசனம் செய்த வகையில் எங்களின் மனதுக்கு சாந்தியும், சந்தோஷமும், அமைதியும், மங்களமும் கிடைத்துள்ளன. அனைவருக்கும் இதே போல் சுபம் உண்டாகட்டும்'' என்று ஹிந்தியில் எழுதி ஜனாதிபதி பிரதீபா பட்டீல் கையெழுத்திட்டார்.

## இந்தியச் செய்திகள்

## தேசிய மாநாடு - காங்கிரஸ் காஷ்மீரில் கூட்டணி ஆட்சி

ஸ்ரீநகர், டிச. 30

காஷ்மீர் மாநில சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இருப்பினும், காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் தேசிய மாநாடு கட்சி ஆட்சி அமைக்க உள்ளது.

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால், காங்கிரஸ் கட்சியும், முப்தி முகமது சயீது தலைமையிலான மக்கள் ஜனநாயகக் கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்தன. கடந்த ஒகஸ்ட் மாதம், அமர்நாத் நில விவகாரத்தில், காங்கிரஸ் அரசுக்கான ஆதரவை மக்கள் ஜனநாயகக் கட்சி வாபஸ் பெற்றது. இதனால் அரசு கவிழ்ந்தது. சட்டசபை கலைக்கப்பட்டது.

இதையடுத்து, காஷ்மீர் சட்டசபைக்கு தேர்தல் நடத்தப்பட்டது. தீவிரவாதிகள் தாக்குதல் அபாயம் கருதி, 7 கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

காஷ்மீர் மாநிலத்தில் மொத்தம் 87 தொகுதிகள் உள்ளன. அங்கு ஆட்சி அமைப்பதற்கு குறைந்தபட்சம் 44 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். ஆனால், எந்தக் கட்சிக்கும் இந்த பெரும்பான்மை கிடைக்கவில்லை. உமர் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டு கட்சி, 28 தொகுதிகளில் வெற்றி பெற்று, தனிப் பெரும் கட்சியாகத் திகழ்கிறது. மக்கள் ஜனநாயகக் கட்சி 21 தொகுதிகளிலும், காங்கிரஸ் 17 தொகுதிகளிலும், பா.ஜ.க. 11 தொகுதிகளிலும், ஜம்மு - காஷ்மீர் தேசிய சிறுத்தைகள் கட்சி, சுயேச்சைகள் உள்ளிட்டோர் 10 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

அமர்நாத் நில விவகாரம் காரணமாக, ஜம்மு பகுதியில் பா.ஜ.க. 11 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

தேர்தலில் அதிக இடங்களில் வென்ற தேசிய மாநாட்டு கட்சி, கூட்டணி ஆட்சி அமைக்க தயாராகி வருகிறது. காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கப்படும் என்று தேசிய மாநாட்டு கட்சி தலைவர் உமர் அப்துல்லா கூறியுள்ளார். பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார். பா.ஜ.கவுடன் கூட்டுச் சேருவதை விட, எதிர்க்கட்சி வரிசையில் அமர்வோம் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால், தேசிய மாநாட்டு கட்சிக்கு ஆதரவு அளிப்பது பற்றி காங்கிரஸ் கட்சி எதுவும் கூறவில்லை. இதுபற்றி விவாதிப்பதற்காக, பிரதமர் மன்மோகன்சிங் இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை காங்கிரஸ் மேல்மட்டக்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் ஒரு மணி நேரம் நடைபெற்றது. ஆனால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

அதே சமயத்தில், காஷ்மீரில் எந்தக் கட்சிக்கும் ஆதரவு அளிக்கப் போவதில்லை என்று பா.ஜ.க. அறிவித்துள்ளது.

இதற்கிடையே, காஷ்மீர் தேர்தல் குறித்து பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர். டில்லியில் காங்கிரஸ் ஆண்டு விழா கூட்டத்தில் கலந்து கொண்ட மன்மோகன்சிங், இந்தத் தேர்தல் ஜனநாயகத்துக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் ஆதரவாக நடத்தப்பட்ட தேர்தல் என்று கூறினார்.

சோனியா காந்தி கூறுகையில், 'யார் வெற்றி பெற்றார்கள் என்பது பிரச்சினை அல்ல. காஷ்மீர் மக்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதுதான் இதில் கவனிக்க வேண்டியது. இதேபோல் அண்டை நாடு (பாகிஸ்தான்) பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்' - என்றார்.

## ஈழத் தமிழருக்காக காங்கிரஸ் ஆதரவுக்குரல் கொடுக்கவில்லை

### சுப. வீரபாண்டியன் ஆதங்கம்

சென்னை, டிச.30

ஈழத்தமிழர்களுக்கு ஏற்ற ஆதரவுக் குரலை காங்கிரஸ் கட்சி கொடுக்கவில்லை என்பதே என் ஆதங்கம். எனவே, சத்தியமூர்த்தி பவன் பற்றிய பேச்சு தொடர்பாக காங்கிரஸார் என்மீது வருத்தம் கொள்ளத் தேவையில்லை - என்று சுப.வீரபாண்டியன் கூறியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

கடந்த 26ஆம் திகதி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் சார்பில் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் நான் ஆற்றிய உரையை ஒரு நாளேடு உள்நோக்கத்துடன் திரித்து வெளியிட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் கே.வி.தங்கபாலு, சத்தியமூர்த்தி பவனை நான் இடிக்கச் சொன்னதாகவும், தைரியம் இருந்தால் நாள், நேரம் குறித்து அதனை இடிக்க வரும்படியும் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன் ஒருநாளும் சத்தியமூர்த்தி பவனை இடிக்கச் சொல்லியிருக்க மாட்டார். அவர் வன்முறையில் நம்பிக்கை இல்லாதவர். அக்கட்டடத்திற்கு ஒரு ஊறும் இதுவரை ஏற்படவில்லை என்பதே அதற்கு சாட்சி என்றுதான் நான் பேசினேன். அடுத்த கட்சியின் அலுவலகத்தில் அனுமதி இல்லாமல் உள்நுழைவதே அநாகரிகம் என்று கருதுபவன் நான்.

என்றைக்கும் மதவாத சக்திகளிடம் நாடு சிக்கிக்கொள்ளக் கூடாது என்ற திராவிட இயக்க சிந்தனை உடையவன் நான். ஈழத்தமிழர்களுக்கு ஏற்ற ஆதரவுக் குரலை காங்கிரஸ் கட்சி கொடுக்கவில்லை என்பதே என் ஆதங்கம்.

எனவே தங்கபாலுவும், காங்கிரஸ் கட்சியினரும் என் மீது வருத்தம் கொள்ள தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் -



காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக தேசிய மாநாட்டு கட்சி வெற்றி பெற்றுள்ளது. கந்தர்பால் தொகுதியில் வெற்றி பெற்ற அக்கட்சியின் தலைவர் உமர் அப்துல்லாவை தொண்டர்கள் ஊர்வலமாக அழைத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்கள் அபாரம் மீண்டும் தோல்வியை நோக்கி ஆஸி. அணி!

மெல்போர்ன், டிச. 30

அவுஸ்திரேலிய தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடைபெற்றுவரும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின்போது தென்னாபிரிக்க அணி விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றையதினம் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தனது சதத்தைப் பெறும் வாய்ப்பை ஓர் ஓட்டத்தால் மயிரிழையில் நழுவவிட்டார். இவரைத் தவிர மற்றைய வீரர்கள் எவரும் அரைச் சதம் கூடக் கடக்கவில்லை. ஹேட்ஸ் 43 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 29 ஓட்டங்களையும், ஹைடன் 23 ஓட்டங்களையும், கடிச் 15 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையோர் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சகலதுறை ஆட்டக்காரர் சைமண்ட்ஸ் ஓட்டமெதுவும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

பந்துவீச்சில் ஸ்ரெய்ன் சிறப்பாகப் பந்து வீசி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கலிஸ், மோர்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், நிற்னி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 459 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்படி அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற 394 ஓட்டங்களுடன் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தம் 641 ஓட்டங்களைப் பெற்று, 182 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்தது.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் 183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது தென்னாபிரிக்க அணி.

இதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அணித் தலைவர் ஸ்மித் மற்றும் கென்ஸி ஆகியோர் களமிறங்கினர். ஆரம்பத்திலேயே தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார் தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது தென்னாபிரிக்க அணி விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஸ்மித் 5 பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களுடனும், கென்ஸி 3 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். வெற்றிக்கனியை ருசிப்பதற்கு தென்னாபிரிக்க அணிக்கு 10 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இன்னும் 153 ஓட்டங்களே தேவைப்படுகின்றன.

## பங்களாதேஷ் - இலங்கை டெஸ்ட் நேற்றைய நாள் ஆட்டம் ரத்து

பங்களாதேஷில் நேற்று தேர்தல் நடைபெற்றது. இதன்காரணமாக நேற்றைய தினம் அந்நாட்டு அரசால் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது.

இதனால் இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்றைய தினம் போட்டி நடைபெறவில்லை.

நேற்றைய போட்டி இன்று தொடர்ந்து நடைபெறும்.




## ஐ.பி.எல். ருவென்ரி — 20 கிரிக்கெட் ஏலத்தில் பீற்றர்சன், பிளின்ரொப், ரெய்ட்டுக்கு கிராக்கி

புதுடில்லி, டிச. 30

இந்தியாவில் அடுத்த ஆண்டு நடக்கும் ஐபிஎல் ருவென்ரி-20 கிரிக்கெட் ஏலத்தில் ஷோன் ரெய்ட், பிளின்ரொப், பீற்றர்சனுக்கு கடும் கிராக்கி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கபில்தேவ், இந்திய கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்) என்ற அமைப்பை உருவாக்கி ருவென்ரி-20 போட்டியை நடத்தினார்.

இதற்குப் பதிலடியாக இந்திய கிரிக்கெட் சபை இந்திய பிரிமியர் லீக் (ஐபிஎல்) என்ற அமைப்பை ஏற்படுத்தி பதிலுக்கு ருவென்ரி-20 போட்டியை நடத்தியது. இப்போட்டியில் பல்வேறு நாடுகளின் முன்னணி வீரர்கள் பங்கேற்றனர். மேலும், வீரர்கள் ஏலம் முறையில் தேர்வு செய்யப்பட்டனர். இந்தப் போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில், 2ஆவது ஆண்டு ஐ.பி.எல் ருவென்ரி-20 போட்டி அடுத்த ஆண்டு (2009) ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடக்க உள்ளது. வீரர்களுக்கான ஏலம் பெப்ரவரி 6ஆம் திகதி நடக்க உள்ளது. இப்போட்டியில் விளையாட முன்னணி வீரர்கள் பூலர் ஆர்வமுடன் உள்ளனர். எனினும், ஆஸியின் இளம் வேகப்பந்து வீச்சாளர் ஷோன் ரெய்ட், இங்கிலாந்து அணித்தலைவர் பீற்றர்சன், சகலதுறை ஆட்டக்காரர் பிளின்ரொப்புக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இவர்களை அணியில் சேர்க்க அணி நிர்வாகங்கள் போட்டி போடுகின்றன.

ஹைதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் அணி நிர்வாகம் ரெய்ட்டை ஏலத்தில் எடுக்க முடிவு செய்துள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் பிளின்ரொப்பும், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் பீற்றர்சனும் விளையாட அதிக வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

## அவுஸ்திரேலியப் பிரதமர் பதவி; ஷேன் வோர்னுக்கு 70% ஆதரவு

மெல்போர்ன், டிச. 30



அவுஸ்திரேலியப் பிரதமர் ஆவதற்கு சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னுக்கு பெரும்பாலானோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? உண்மைதான். தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பிலிருந்து இத் தகவல் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியில் வர்ணனையாளராகப் பணியாற்றிவரும் வோர்ன், தற்போதைய பிரதமர் கெவின் ரூட் உடன் அந்தப் போட்டியில் சேர்க்கப்பட்டிருந்தார். பிரதமர் பதவிக்கு வோர்ன் போட்டியிடலாமா என்பதுதான் கேள்வி.

அதில் 70 சதவீதத்துக்கும் மேலானோர் குறும்புத்தனம் உடைய வோர்னுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால், அந்தக் கற்பனையெல்லாம் எனக்கு சிறிதும் கிடையாது என வோர்ன் கூறியுள்ளார்.

கிரிக்கெட் வீரர் என்றால் என்ன விளையாட்டு மட்டும் தானா?

## கம்பீரின் தொடர் வெற்றிக்கு காரணம் பயிற்சியாளர் கிரிஸ்டனின் 'மந்திரம்'

புதுடில்லி, டிச.30

சமீபத்தில் தான் சிறப்பாக துடுப்பாட்டத்தில் பிரகாசித்ததற்கு அணியின் பயிற்சியாளர் கேரி கிரிஸ்டன் தன்னை பதட்டமில்லாமல் விளையாடும்படி சொன்ன ஆலோசனையை மந்திர வாக்காக கடைப்பிடித்ததே காரணம் என்று இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர் கூறியுள்ளார்.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையே சமீபத்தில் நடந்த ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர் மிகச் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார். தொடக்கத்தில் ஒரு நாள் போட்டிகளில் மட்டும் இடம்பிடித்து வந்த கம்பீர், தற்போது டெஸ்ட் தொடர்களிலும் இடம்பிடித்து மிகச் சிறப்பாக விளையாடி வருகிறார். இவர் இந்த வருடத்தில் 8 டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடி 1,134 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவருடைய ஓட்ட சராசரி 70.88 ஆகும்.

தன்னுடைய இந்த ஓட்டக் குவிப்பிற்கு இந்திய அணியின் பயிற்சியாளர் தென்னாபிரிக்காவின் கேரி கிரிஸ்டனே காரணம் என்று கம்பீர் தெரிவித்தார். கிரிஸ்டன் தனக்குக் கொடுத்த ஆலோசனையேதான் இந்த அளவிற்கு ஓட்டங்களைக் குவிக்கக் காரணம் என்றார். ஆடுகளத்தில் மிகவும் பதட்டமாக இருக்கும் தன்னை பதட்டமில்லாமல் விளையாடும்படி கிரிஸ்டன் கொடுத்த ஆலோசனையை மந்திர வாக்காகக் கடைப்பிடித்ததே தன்னுடைய ஓட்டக் குவிப்பிற்கு காரணம் என்றும் கம்பீர் தெரிவித்தார். இந்த ஆண்டு எனக்கு மிகச் சிறப்பான ஆண்டாக அமைந்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் இவ்வாறெல்லாம் சாதிப்பேன் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வருகிற காலங்களிலும் தொடர்ந்து ஓட்டங்களைக் குவித்து இந்திய அணிக்கு உறுதுணையாக இருப்பேன் என்றும் கம்பீர் தெரிவித்தார். தொடர்ந்து சாதிப்பதே என்னுடைய முக்கிய குறிக்கோளாக இருக்கும். எப்போதும் ஓட்டங்களைக் குவிப்பதில் நான் விழிப்போடு இருப்பேன் என்றும் தெரிவித்த கம்பீர், ஒரு நாள் போட்டிகளில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிப்பதோடு, டெஸ்ட் போட்டிகளில் நிதானமான ஆட்டத்தைக் கையாண்டு அணிக்கு உறுதுணையாக இருக்கவும் தான் முயற்சி செய்வேன் என்றும் மேலும் தெரிவித்தார்.

உண்மையிலேயே கம்பீர் ஒரு நாள் போட்டிக்கும், டெஸ்ட் போட்டிக்கும் ஒரு சிறந்த வீரராகி விட்டார் என்பதை மொஹாலியில் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட்டில் 4ஆவது நாளில் அவர் ஆடிய விதத்தில் இருந்தே தெரிந்து கொள்ளலாம். அன்றைய தினம் 50 ஓவர்கள் களத்தில் நின்ற கம்பீர் 41 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரெட்லீ காயம்

சிட்னி, டிச. 30

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் பிரெட்லீ ஒரு மாத காலம் ஓய்வெடுக்க உள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் போது வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீக்கு கட்டைவிரலில் காயம் ஏற்பட்டது.

இதனையடுத்து அவர் ஒரு மாத காலம் ஓய்வெடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் பிரெட்லீ அடுத்த டெஸ்ட் போட்டியில் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## அக்ரம் போல் பந்துவீச ஆசை

### சகீர்கான் சொல்கிறார்

புதுடில்லி, டிச. 30

அக்ரம் போல் பந்து வீசி துடுப்பாட்டக்காரர்களை மிரட்டப் போவதாக இந்திய வீரர் சகீர் கான் கூறியுள்ளார்.




நடந்து முடிந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் முன்னணி பந்து வீச்சாளர் சகீர்கான், அதிகபட்சமாக 8 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்திய மண்ணில் முதல் முறையாக தொடர் நாயகன் விருதை வென்று அசத்தினார். இந்தியாவின் அக்ரம் என்று தற்போது பேசப் படுகிறார் சகீர்கான். கடந்த சில ஆண்டுகளாக இவரது பந்துவீச்சில் ஆட்டம் காணாதவர்களே இல்லை என்று சொல்லலாம். குறிப்பாக, ஆஸி. வீரர் ஹைடன், சகீர்கானின் பந்தில் பல முறை ஆட்டமிழந்துள்ளார்.

தனது பந்து வீச்சுக் குறித்து சகீர்கான் கூறியதாவது:-

''தொடக்கத்தில் அதிக தூரத்திலிருந்து வந்து பந்து வீசியதால், பல முறை எனக்கு காயம் ஏற்பட்டது. இதனாலே தொடர்ந்து அணியில் இடம் பெறவில்லை. இதையடுத்து, பந்து வீச்சு முறையில் மாற் றம் செய்ய முடிவு செய்தேன். குறைந்த தூரத்திலிருந்து ஓடி வந்து, சரியான இலக்கில் பந்து வீசக் கற்றுக் கொண்டேன். அத்தோடு, வரிவர்ஸ் ஸ்விங் பயிற்சியில் கடுமையாக ஈடுபட்டேன். இதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.

சமீபத்திய தொடர்களில் சிறப்பாகப் பந்து வீசுவதோடு தொடக்கத்தில் முன்னணி துடுப்பாட்டக்காரர்களை ஆட்டமிழக்கச் செய்கிறேன். முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜவஹல் ஸ்ரீநாத்திடம் பந்துவீச்சு நுணுக்கம் கற்றுக் கொண்டேன். தற்போது எனக்கு அடுத்து பந்து வீசும் இஷாந்த் ஷர்மா, என்னை விடத் திறமையாகப் பந்து வீசுகிறார். இதனால், என்னால் அதிக விக்கெட்டுகளை வீழ்த்த முடிகிறது.

அக்ரம் போல் பந்து வீசுவதாக பலர் என்னிடம் கூறுகின்றனர். அக்ரம் மாதிரி யாரும் பந்து வீச முடியாது. அவரைப் போல் பந்துவீசி துடுப்பாட்டக்காரர்களை மிரட்டப் போகிறேன். இன்னும் சில ஆண்டுகள் விளையாடி இந்தியாவுக்கு பல வெற்றிகளை பெற்றுத் தர வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்'' என்றார். இன்னும் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினால் டெஸ்ட் போட்டியில் 200 விக்கெட்டை வீழ்த்திய பெருமை சகீருக்குக் கிடைக்கும்.

இதேவேளை, பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரமோடு தன்னை பலரும் ஒப்பிடுவது மகிழ்ச்சியைத் தருவதாக சகீர்கான் கூறியுள்ளார்.

சமீப காலமாக இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் சிறப்பாகப் பந்து வீசி வருகிறார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் அவர் தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தான் ஓடிவரும் தூரத்தைக் குறைத்து கொண்டதே சிறப்பாக பந்து வீச காரணம் என்று தெரிவித்தார்.

மேலும் இங்கிலாந்து கவுண்டி போட்டிகளில் ஆடியது தனக்கு உதவியாக இருந்தது என்று கூறிய அவர், பலரும் தன்னை வாசீம் அக்ரமோடு ஒப்பிட்டு பேசுவது மகிழ்ச்சியைத் தருவதாகத் தெரிவித்தார். எனினும் வசிம் அக்ரம் போன்ற பந்து வீச்சாளர்கள் ஒரு தலை முறைக்கு ஒருவர் மட்டுமே வர முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேறிய 350 வைத்தியர்கள் மீண்டும் கடமைக்கு

கொழும்பு, டிசெ. 30

மட்டக்களப்பில் அண்மையில் சிங்கள வைத்தியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து வடக்கு கிழக்கில் இருந்து வெளியேறிய சிங்கள வைத்தியர்களில் 350 பேர் மீண்டும் ஓரிரு நாள்களுக்குள் மீண்டும் வடக்கு கிழக்குக்கு கடமைக்குச் செல்லுகின்றனர்.

பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தற்போது பிரதான வைத்தியசாலைகளில் மாத்திரமே சிங்கள வைத்தியர்கள் கடமையாற்றுகின்றனர் என்றும் மேலும் பல வைத்தியசாலைகளுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டமையினாலேயே 350 வைத்தியர்களை அனுப்ப முடிவு எடுக்கப்பட்டது என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் உப்புல் குணசேகர நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் தெடர்ந்து கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பில் அண்மையில் சிங்கள வைத்தியர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையால் பாதுகாப்பை கருத்திற்கொண்டு வடக்கு கிழக்கில் பணி புரிந்த சிங்கள வைத்தியர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறினர்.

அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் மாத்திரம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டமையால், அவ்வைத்தியசாலைகளுக்கு மாத்திரம் சிங்கள வைத்தியர்கள் அனுப்பப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் வைத்திய அதி காரிகள், சுகாதார சேவை அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் பங்களிப்புடன் சந்திப்பொன்று இடம்பெற்றது.

அச்சந்திப்பில் மேலும் பல வைத்தியசாலைகளில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்புத் தரப்பில் எமக்குச் சொல்லப்பட்டது.

இதைத் தொடர்ந்து மேலும் 350 சிங்கள வைத்தியர்களை வடக்கு கிழக்குக்கு அனுப்ப நாம் முடிவெடுத்தோம். ஓரிரு நாள்களில் அவர்கள் அங்கு செல்வர். என்றார். (அ-சி)

## முகமாலையில் சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.30

முகமாலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சிப்பாயின் சடலம் நேற்று முன்தினம் கொடி காமம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

வரணி முகாமில் இருந்து முகமாலைக்கு கடமைக்குச் சென்ற ஜீ.ஐ.தனுஸ்க (வயது18) என்னும் சிப்பாயே இறந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிவானிடம் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். (1-207)

# ஜி.சீ.ஈ. விடைத்தாள் திருத்தும் பணியை புறக்கணிப்பதற்கு ஆசிரியர்கள் முடிவு

கொழும்பு, டிசெ. 30

நாளை ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியை ஆசிரியர்கள் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு இன்றும் நடவடிக்கை எடுக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி ஆரம்பமாகின்றது. இதில் கலந்துகொள்வது தொடர்பாக முடிவெடுக்க ஞாயிற்றுக்கிழமை எமது சங்கத்தின் நிறைவேற்றுக் குழு கூடியது.

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசு இன்னும் நடவடிக்கை எடுக்காமைக்கும் சாதாரணதரப் பரீட்சை கணிதப்பாட தொடர்பில் ஏற்பட்ட பிழைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக விடைத்தாள் திருத்தும் பணிளை முற்றாக பகிஸ்கரிப்பது என எமது சங்கத்தின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்தது.

இதனூடாக மாணவர்களின் கல்வியை பாதிக்கச் செய்வது எமது நோக்கமல்ல, சம்பள அதிகரிப்புத் தொடர்பான எமது உரிமைகளை வென்றெடுப்பதே இந்த பகிஸ்கரிப்பின் நோக்கம்.

சம்பள அதிகரிப்புத் தொடர்பாக அரசு திருப்திகரமானதொரு தீர்மானத்தை எடுத்தால் நாம் எமது மாற்றத்தை வெளிப்படுத்துவோம். இல்லாது விட்டால் திருத்தப் பணியை பகிஸ்கரிப்பது என்ற முடிவில் எந்த மாற்றமும் ஏற்படாது - என்றார்.

### மத்திய, வடமேல் மாகாணத் தேர்தல்:

# விமல் அணியின் 10 உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து களத்தில்!

கொழும்பு, டிசெ. 30

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் விமல் வீரவன்ஸவின் தேசிய முன்னணி கட்சியைச் சேர்ந்த 10 பேர் அரசுடன் இணைந்து போட்டியிடுகின்றனர் என்று விமல் வீரவன்ஸ நேற்று கூறினார்.

பத்தரமுல்லவில் உள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் கூறியவை வருமாறு:-

எமது படையினர் மிகத் திறமையாக யுத்தம் செய்து பயங்கரவாதிகளை ஒடுக்கி வருகின்றனர். படையினரின் வெற்றி தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு வாழ்வு.

இந்த வெற்றியைத் தடுப்பதற்காக உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் சதி இடம்பெறுகின்றது. முழு நாட்டிற்கும் பாதிப்பாக இருக்கும் இச்சதச் சதியை முறியடிப்பது எம் அனைவரதும் கடமை. அதன் காரணமாகவேதான் நாம் அரசுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்து, அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் செய்துள்ளோம். எமது இந்த இணைவு யுத்தத்திற்கு மேலும் பலம் சேர்க்கும்.

யுத்தத்திற்குப் பலம் சேர்க்கும் எமது நடவடிக்கைகளில் ஒன்றாகவே மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தல்களில் நாம் அரசுடன் இணைந்து போட்டியிடு கின்றோம்.

எமது கட்சியின் சார்பில் 10 பேர் வேட்பாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இருவர் போட்டி யிடுவர் -என் றார். (சி)

# கணித வினாத்தாள் தயாரித்தோரை தண்டிக்கக் கோருகின்றது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 30

ஜி.சீ.ஈ. சாதாரண தர கணிதபாட வினாத்தாள்களைத் தயாரித்த குழுவிற்கு அரசு தண்டனை வழங்க வேண்டும் என்று ஐ.தே. கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. அகிலவிராஜ் காரியவசந்தே இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜி.சீ.ஈ. சாதாரண தர கணித பாட வினாத்தாள்கள் பிழையாகத் தயாரிக்கப்பட்டமையால் மாணவர்கள் கடும் மன உழைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். அவர்கள் கல்வி மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

•எல்லாவற்றையும் அரசியல் மயமாக்கிய அரசு இப்போது கல்வியையும் அரசியல் மயமாக்கிவிட்டது. கல்வி தொடர்பான வரலாற்றில் ஒருபோதும் ஏற்பட்டிராத பிரச்சினைகள் எல்லாம் இப்போது ஏற் பட்டுள்ளன.

ஒருபுறம் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தீர்க்கப்படாமல் உள்ளது. மறுபுறம் கல்வியில் பல குறைபாடுகள் நிலவுகின்றன. இதற்கு எதிராக நாம் குரல் கொடுப்பதை இட்டு மாணவர்களும் பெற்றோர்களும் சந்தோசமடைந்துள்ளனர்; எமக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

கணிதபாட வினாத்தாள்கள் பிழையாகத் தயாரிக்கப்பட்டமையால்தான் அவை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இதற்கு லட்சக்கணக்கில் பணம் செலவழிகின்றது.

முதல் தடவையிலேயே வினாத்தாள்களைச் சரியானமுறையில் தயாரித்திருந்தால் இந்தச் செலவு ஏற்பட இடமிருந்திருக்காது. பிழையாக வினாத்தாள்களைத் தயாரித்தமைக்காகத் தயாரிப்புக் குழுவிற்கு அரசு தண்டனை வழங்க வேண்டும் - என்றார். (சி)

## வன்னி மக்களின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விஜயம் தொடர்பாக அவர் முல் லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

தங்களுடன் மேற்கொண்ட தொலை பேசி உரையாடலுடன் இணைக்கின்றேன். இந்தக் கடிதத்தை தங்களுக்கு எழுது வது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலும் மனித உரிமைகள் பாதுகாவலன் என்ற ரீதியிலும் நாடாளுமன்ற உறுப் பினர்களின் மனித உரிமைகள் பாதுகாப்பு அமைச்சின் பொதுச் செயலாளர் என்ற ரீதியிலுமேயாகும்.

தற்போது வன்னியில் உண்ண உணவோ, உடுத்த ஆடையோ, தங்க இருப்பிடமோ, அருந்த நீரோ இன்றி பல முறை அகதிகளாக்கப்பட்டு அல்லற்படும் அப்பாவித் தமிழ் மக்களின் உண்மை நிலைவரத்தை அறிந்து கொள்வதற்காக நான் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட் டங்களுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள் வதற்கு உத்தேசித்துள்ளேன்.

**உயிரைப் பணயம் வைத்தாவது தமிழ் மக்களுக்கு உதவுவேன்**

இந்த விஜயம் மிகவும் இக்கட்டானதும் அபாயகரமானதும் என்பதை நான் நன்கு அறிவேன். ஆயினும் எனது உயிரைப் பணயம் வைத்தாவது அப்பாவித் தமிழ் மக்களுக்காக சேவை செய்வதில் ஆர்வமாக உள்ளேன். இவ்வாறு துன்புறும் அப்பாவி தமிழ் மக்களின் நிலையைக் கண்டும் காணாதது போல் இருப்பதற்கு இனியும் என்னால் முடியாதுள்ளது.

எனது வன்னி விஜயத்துக்கு தங்களது ஒத்துழைப்பை நல்குவீர்கள் என்று நம்புகிறேன். அதற்காக அதற்குரிய அதிகாரிகளிடம் கதைத்து ஏற்பாடுகளை மேற் கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். அத்துடன் நான் எனது உயிரைப் பணயம் வைத்து வன்னிக்கு மேற்கொள்ளும் இந்த விஜயத்தில் எவ்வித அரசியல் நோக்கங்களும் இல்லையென்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். நான் எப்போதும் அல்லற்படும் அப்பாவித் தமிழ் மக்களுக்காக சேவை [illegible] தில்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன் - என்றுள்ளது. (அ-1)



## மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

மகோற்சவ விஞ்ஞாபனம் - 2009

கொடியேற்றம்:- 01.01.2009 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு

தேர் உற்சவம்:- 09.01.2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு

தீர்த்த உற்சவம்:- 10.01.2009 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு

மகோற்சவ குரு:- கிரியாகலாபமணி

சிவஸ்ரீ. க.நாகேஸ்வரக்குருக்கள்

அடியார்கள் அனைவரும் அம்பாளின் உற்சவங்களை தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று இனிது வாழ்வீர்களாக!

சி.சிவகுரு(தர்மகர்த்தா).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடிமேல் 23 . 02 . 1931



ஆண்டவன் அடியின் கீழ் 30 . 11 . 2008

அமரர் **சின்னையா இராசலிங்கம்**

திதி : திருதியை

எம்மையெல்லாம் அன்புடனும் பாசத்துடனும் அரவணைத்து வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவிப் பதுடன் இன்றையதினம் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல: 10/1, தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
தொ.பே:- 060 221 9030 (81304) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிவராஜா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராஜா நேற்று (29.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரி (சித்தன்கேணி அம்மன்), கந்தசாமி, அப்புலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2008) செவ்வாய்க்கிழமை ஏழாலை மேற்கு, ஏழாலையில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு.
தகவல்:
தவநாயகி.

### சபாபதிப்பிள்ளை இராஜரட்ணம்



கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை இராஜரட்ணம் நேற்று (29.12.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - சௌந்தரம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமணி - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் அனித்தா(லண்டன்), அனுராஜ் (லண்டன்), சரணியா (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் லக்சுனிகாந்தனின் மாமனாரும் கிரிஷாந்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/1, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம். (81308)
தகவல்:
இ.இராஜேஸ்வரி(மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# வன்னியில் வெள்ளப் பாதிப்பு நீடிக்கிறது ஏ-35 வீதியில் போக்குவரத்து பெரிதும் பாதிப்பு

வவுனியா, டிசெ.30

கிளிநொச்சி - பரந்தன் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையான ஏ- 35 பிரதான வீதியில் விஸ்வமடுவிற்கும் உடையார்கட்டிற்குமிடையில் அமைந்துள்ள தேராவில் குளத்து நீர் தொடர்ந்தும் பாதையை மேவிப் பாய்கின்றது. இதனால் அப்பாதையூடாகப் பயணம் செய்யும் பயணிகள், பஸ்கள் உட்பட வாகனங்கள்யாவும் மிக ஆபத்தான நிலையிலேயே அப்பாதையைக் கடக்க வேண்டியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதையை அடையாளப்படுத்தும் விதமாக தடிகள் நடப்பட்டுள்ளபோதிலும் அப்பாதையிலிருந்து வாகனங்கள் சற்று விலகினாலும் அவை கவிழும் அபாயநிலை உள்ளது. கடந்த சனியன்று பயணிகள் பஸ் ஒன்று இப்பாதையில் குடைசாய்ந்து அதில் பிரயாணம் செய்த பிரயாணிகள் தெய்வாதீனமாகத் தப்பிய சம்பவம் இடம்பெற்றது.

தற்போது மழை தணிவடைந்துள்ள நிலையிலும் இக்குளத்தின் நீர் மட்டம் குறைவடையாமல் பாதையை மேவியே நிற்கின்றது. இவ்வாறானதோர் நிலை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டதென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பாதையைக் கடப்பதற்கு மாற்றுப் பாதையொன்று அமைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் இந்த வீதியில் செல்லும் வாகனங்களை இலக்குவைத்து விமானப் படையினர் தாக்குதல்களை நடத்துவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என மேலும் அறியவருகிறது.

இதேவேளை, வன்னியில் பெய்து வந்த கடும் மழை தணிவடைந்துள்ள நிலையில், நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இடம்பெயர்ந்து குடியிருப்புகளில் தங்கியுள்ள மக்கள் நுளம்புகளால் தற்போது பெரும் சிரமங்களையும், மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் ஏற்படும் ஆபத்தையும் எதிர்கொண்டுள்ளனர்.

நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் மலத்தியோன் போன்ற மருந்துகளை வன்னிக்கு எடுத்துவர படைத்தரப்பு தடைவிதிக்கும் சூழ்நிலையில் உள்ளூரில் இயங்கும் தொண்டு நிறுவனங்கள் நுளம்பு வலைகளை இடம்பெயர்ந்த மக்களுக்கு இப்போது வழங்கி வருகின்றன என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-சி)

# மருத்துவ வசதி, பாதுகாப்பு இல்லை என ஆட்சேபித்து இலங்கை அகதிகள் சென்னையில் ஆர்ப்பாட்டம்

சென்னை, டிசெ 30

போதுமான பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாததால் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்தார் எனக் கூறி நூற்றுக்கணக்கான இலங்கை அகதிகள் சென்னை அருகில் உள்ள கும்மிடிப்பூண்டி கலக்டரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று போராட்டம் நடத்தினர். மாணவனின் உடலை சாலையில் வைத்து அவர்கள் மறியலில் ஈடுபட முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்திருக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

கும்மிடிப்பூண்டி இலங்கை அகதிகள் முகாமில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த விபத்தில் பள்ளி மாணவர் ஒருவர் படுகாயம் அடைந்தார். அந்த மாணவனுக்கு உடனடியாக வைத்தியச் சிகிச்சை அளிக்க முடியாததால் அவர் உயிரிழக்க நேரிட்டார் என அகதிகள் கூறுகின்றனர்.

மேலும், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் விபத்து நிகழாமல் தடுத்திருக்கலாம் என்று கூறிய அவர்கள், இறந்த மாணவனின் உடலை கலக்டர் அலுவலகத்துக்கு முன்பாக வைத்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# இரத்மலானையில் நேற்று சிறிய குண்டு வெடிப்பு!

கொழும்பு, டிசெ.30

இரத்மலானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழுமடம சந்தியில் உள்ள மின்மாற்றிக்கு அருகில் நேற்றிரவு சிறிய ரக குண்டு ஒன்று வெடித்திருக்கிறது.

எனினும், மின்மாற்றிக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்றும், மின்மாற்றியைத் தாங்கிக்கொண்டிருந்த கொங்கிறீட் தூண்களில் ஒன்றே சேதமடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்துசென்ற படையினர் அங்கு கடும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் கல்கிசைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

## இலங்கை கவலை தெரிவிப்பு

காஸா பள்ளத்தாக்கில் தீவிரமடைந்துள்ள வன்முறைகள் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு இரு தரப்பையும் வன்முறைகளை நிறுத்துமாறு கோரியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பாலஸ்தின மோதலிற்கு நிரந்தர தீர்வைக் காண்பதற்கான பேச்சை மேற்கொள்வதற்கான சுமூகமான சூழலை உருவாக்குமாறு இலங்கை வேண்டுகோளை விடுத்துள்ளது.

# உணவு விஷமானதால் ஐம்பது பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ.30

கொழும்பில் புறநகர்ப் பகுதியான கடவத்தை ரன்முத்துகல பகுதியில் உணவு விஷமாகியதில் 9 சிறுவர்கள் உட்பட 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு திருமணச் சடங்கு ஒன்றில் உட்கொண்ட உணவே விஷமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் நேற்றுக்காலை ராகம மற்றும் கம்பஹா வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் உட்கொண்ட உணவின் மாதிரிகள் பரிசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப் பட்டுள்ளன என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (சி)

## வடக்கும் தெற்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பொருட்டு தெற்கையும் வடக்கையும் இணைத்து இரு பிரதேச மக்களுக்கும் இடையில் புரிந்துணர்வையும் உறவையும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கிலேயே நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கண்காட்சி வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலமாக விளங்குகின்றது. இக் கண்காட்சி மூலம் மக்கள்மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுவதுடன் அறிவுசார் வளர்ச்சிகளையும் அடையமுடியும். வடக்கு - தெற்கு உறவு நீடித்து நிலைக்க வாழ்த்துகளைக் கூறுகிறேன் - என்று தெரிவித்தார். (அ-1)

# 17 இராணுவத்தினரின் சடலங்கள் ஐ.சி.ஆர்.சி. ஊடாக ஒப்படைப்பு

முல்லைத்தீவு, டிச. 30

முல்லைத்தீவு முன்னரங்க நிலைகளில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்த இராணுவத்தினரின் 17பேரின் சடலங்களை நேற்றுக்காலை 10 மணியளவில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் புலிகள் கையளித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகப் பணிப்பாளர் மு.பாவரசனால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வன்னிக்கான வதிவிடப்பிரதிநிதி யூலியனிடம் இச்சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவை நோக்கிப் படையினர் இருமுனை முன்நகர்வை மேற்கொண்டபோதே விடுதலைப் புலிகளால் இச்சடலங்கள் கைப்பற்றப்பட்டன. (சி)

# புறக்கோட்டை நடைபாதைக் கடைகள் பொலிஸாரால் நேற்று அகற்றப்பட்டன

கொழும்பு, டிச. 30

கொழும்பு புறக்கோட்டை பகுதியிலுள்ள நடைபாதை வியாபாரிகள் நேற்று பொலிஸாரால் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் அப்புறப்படுத்தப்பட்டனர்.

வத்தளையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து கொழும்பு நகரின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாகவே நடைபாதை வியாபாரிகள் அப்புறப்படுத்தப்படுகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் இதனை நிராகரித்து நடைபாதை வியாபாரிகள் பொலிஸார் தங்களை பழிவாங்க முயற்சிக்கின்றனர் எனத் தெரிவித்ததுடன் கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நடைபாதை வியாபாரிகளுக்கு எதிரான இந்த நடவடிக்கைக்கும் தமக்கும் தொடர்பில்லை என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## பால்மா வகைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலையிலும் பார்க்க கூடுதல் விலையில் பால்மா வகைகளை விற்கும் வர்த்தகர்கள் தொடர்பாக 011 23211696 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல் வழங்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-சி)

## வத்தளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுத் தாக்குதலை அடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது சந்தேகத்தின் பேரில் 80 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது 20 பேரும், நேற்று அதிகாலை முதல் மதியம் வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 60 பேரும் கைதுசெய்யப்பட்டனர் என்று வத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டு அவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பொதுமகன் ஒருவர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டதுடன் 17 பேர் படுகாயமடைந்தமை தெரிந்ததே. (அ-சி)

## செலான் வங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலான் வங்கியின் நிர்வாக இயக்குநர் சபை இடைநிறுத்தப்பட்டுள்ளது. விரைவில் புதிய நிர்வாக சபை நியமிக்கப்படும் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

சிலிங்கோ இணைநிறுவங்களில் ஒன்றான கோல்டன் கீ கிரெடிட் கார்ட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகளைத் தொடர்ந்து இந்தச் சூழ்நிலை உருவாகியதாகப் பேசப்படுகிறது.

முன்னதாக நேற்று, கொழும்பு டுப்ளிகேஷன் வீதியிலுள்ள கோல்டன் கீ நிறுவனத்தின் தலைமையகத்திற்கு முன்னாள் திரண்ட 5000 இற்கும் மேற்பட்ட மக்கள் தாங்கள் வைப்பிலிட்ட பணத்தை எப்போது மீளப் பெறமுடியும் எனக் கோரினர்.

இதன் காரணமாக பதற்றமான சூழ்நிலை உருவானது. பின்னர் பொதுமக்கள் தங்களது பணத்தினை மீளப் பெறுவதற்கான விண்ணப்பங்களையும் அதிகாரிகளிடம் கையளித்தனர். (அ)

## கிளிநொச்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரம் இருந்து கொண்டு நாட்டை முன்னெடுக்க இயலாது.

ஐக்கிய இலங்கையில் அனைத்து மக்களும் சுதந்திரமாகவும் நட்புறவுடனும் வாழ வேண்டியவர்களாக உள்ளனர்.

இதற்கான திட்டங்களையே ஜனாதிபதி வகுத்து வருகிறார். கண்டி மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்கள் எப்பொழுதும் அன்பையும் சகோதரத்துவத்தையும் பெரிதாக மதிப்பார்கள். இவற்றுக்கு மத்தியில்தான் பிரபாகரன் வடக்கில் இருந்து 1990 ஆம் ஆண்டு 96 ஆயிரம் முஸ்லிம்களை விரட்டி அடித்து விட்டார். காத்தான்குடி பள்ளிவாசலில் இடம்பெற்ற 115 கொலைகளையும் மூதூர் பிரதேசத்தில் 37 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தையும்நான் இங்கு நினைவுப டுத்த விரும்புகிறேன்.

வடக்கு யுத்தம் இறுதிக்கட்டத்தில்

என்றாலும் 72 மணித்தியாலயங்களுக்குள் மூதூரில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்கள் திருப்பி அவ்விடத்திற்கே அனுப்பப்பட்டனர்.

இன்று வடக்கில் நடைபெறும் யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. நடைபெறப் போகும் மாகாணசபைத் தேர்தலில் கிடைக்கும் வெற்றியுடன் இலங்கை வரலாற்று நூல்களில் இருந்து பிரபாகரனின் பெயரை நீக்கிவிடுவோம். மனித உயிர்களைத் துச்சமாக மதிக்கும் பிரபாகரன் கிளிநொச்சியில் ஒளிந்திருக்கிறார். அவரை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

நாட்டை அழிவில் இருந்தும் மீட்டெடுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகுந்த முயற்சி எடுத்து வருகிறார். இதனை உணர்ந்து மக்கள் அவரை நோக்கி அணி திரள்கிறார்கள். இதன் மூலம் அவர் தமது ஜனாதிபதிப் பதவியை 2018 ஆம் ஆண்டு வரை வகிக்கவே போகின்றார். எனவே நடைபெறப் போகும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் ஐ.ம.சு. முன்னணி வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டுமென நான் கோருகிறேன். - என்றார். (அ-சி)

① DMI
நாவலர் வீதி, யாழ். ஸ்ரான்லி வீதி, யாழ்.

CB Computer Academy
Station Road, Kondavil.
விசேடபிரிவுகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Computerized Accounting
Computer Hardware
Web Design 31.12.2008
Ms Office Wed - 3.00 p.m
Java Programming
Internet and E-Mail
உங்களுக்குப் பொருத்தமான நேரத்தைத் தெரிவு செய்ய உடனே எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
Station Road, Kondavil

② A/L 2011
கலை, வர்த்தகப் பிரிவுகள்

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ்றோட், இணுவில்
இரு இடங்களிலும்
A/L 2011
கலை - வர்த்தகம்
ஜனவரி- 10இல்
இரு இடங்களிலும் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

A/L Physics
By: P.T.Mohan B.Sc
English&Tamil Medium
at No.70/188 B, மானிப்பாய் வீதி (ஜவசக்தி அருகில்), யாழ்ப்பாணம்.

PERSONAL ENGLISH CLASSES
316, பருத்தித்துறை வீதி, யாழ். NAVALAR INSTITUTE
விசேட சிங்களம்
எழுத வாசிக்க
By: K.கார்த்திகேயன் (பயிற்றப்பட்ட ஆசிரியர்)
ஆரம்பம்: இன்று 30.12.2008
பிரிவு I 3.30-4.30 (B.Ed ஆசிரியர்களுக்கானது)
பிரிவு II 4.30-5.30 (உத்தியோகத்தர்களுக்கானது)
பிரிவு III 5.30-6.30 (பேச்சுப் பயிற்சி)
Tue/Fri

③ "பொறுத்தவர் பூமி ஆழ்வார்" 3,4 அல்ல 10 வரை பொறுத்திருங்கள்"
ஜனவரி - 10
காலை 9.00 மணி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org